பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 27 வியாழக்கிழமை 12.11.2020 கதிர் 07

## இது ரகசியம் அல்ல!

'ஊருக்கடி உபதேசம்; உனக்கில்லையடி' என்பார்கள். அப்படித் தான் நடந்து கொள்கின்றது சைக்கிள் கட்சி.

அரசியலில் யாரும் புண்ணியாத்மா கிடையாது. உள்ளதுக்குள் வள்ளிசைத் தேடிப் பிடிப்பது தான் அரசியல்

பக்கம் 02

# கோப்பாயில் கொரோனாச் சிகிச்சைக்கு 50 வெளிநாட்டவர்கள் நேற்று அனுமதி

### அவர்களில் நாற்பது பேர் ஒரு நிறுவனத்தில் பணியாற்றும் இந்தியர்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.12

கோப்பாய் கல்வியல் கல்லூரியில் இயங்கும் கொரோனா வைத்தியசாலையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தற்போது அதிகரித்து வரும் கொரோனா தொற்று காரணமாக இலங்கையில் தங்கியுள்ள பல வெளி நாட்டவர்களும் கொரோனா தாக்கத்திற்கு இலக்காகி

பக்கம் 02

## நேற்றும் 635 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் நேற்றும் 635 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது எனசுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாவின் மூன்றாவது அலையில் மட்டும் சிக்கிப் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆயிரத்து 876 ஆக உயர்ந்துள்ளது.

பக்கம் 02

# மேல் மாகாணத்தில் உள்ளவர்கள் வெளி மாகாணம் செல்லத் தடை!



## ஜனாதிபதி கோட்டா அதிரடி உத்தரவு

*நேற்றிரவு முதல் 15ஆம் திகதி நள்ளிரவு வரை வெளியேற முடியாது.
*பஸ்கள் நுழைதல், வெளியேறுதல் போன்றவற்றுக்கும் முற்றாகத் தடை.
*தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க விசேட கவனம்.
*நாட்டின் அனைத்துப் பிரதேச மருந்தகங்களும் தொடர்ந்து செயற்பாட்டில்.

கொழும்பு, நவம்பர் 12

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுடையவர்கள் அதிகம் இனங்காணப்பட்டுள்ள மேல் மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்கான பயணங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொரோனாத் தடுப்பு விசேட செயலணியுடனான சந்திப்பு நேற்று இடம்பெற்றபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பக்கம் 02

## இலங்கையில் எதிர்வரும் நாள்களில் கொரோனா சாவுகள் உச்சமடையும்!

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

வெளிநாடுகளைப் போன்று இலங்கையிலும் கொரோனா வைரஸால் வீடுகளிலேயே மக்கள் இறக்கின்றார்கள். இதனால் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது போன்று கொரோனா சாவுகளும் எதிர்வரும் நாள்களில் உச்சத்தை அடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

– இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் ஹரித அளுத்கே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு

பக்கம் 02

## நேற்றும் 5 பேர் திடீர் உயிரிழப்பு கொரோனா சாவு 46 ஆக உயர்வு

### நாளுக்கு நாள் இறப்பு எண்ணிக்கை கூடுவதால் அச்சத்தில் மக்கள்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. இதனால் மக்கள் அச்சமடைந்துள்ளனர். நேற்றும் ஒரு பெண் உட்பட 5 பேர் திடீரென உயிரிழந்துள்ளனர். அதற்கமைய நாட்டில் கொரோனாச் சாவுகள் 46 ஆக உயர்ந்துள்ளது.

இம்புல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயது ஆண் ஒருவர், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறந்த பின்னர் அவருக்கு மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனை யில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பக்கம் 02

## கிளிநொச்சியில் நேற்றும் ஒருவருக்குக் கொரோனா

கிளிநொச்சி, கோணாவில் – யூனியன் குளம் முருகன் கோயிலடியில் வசிக்கும் 47 வயதான நபர் ஒருவருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி கொழும் பிலிருந்து வீடு திரும்பிய அவர், சுகாதாரத் துறையினரால் சுயதனிமைப்படுத்தப் பட்டார்.

இந்த நிலையில் அவரிடம் மாதிரி பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது அவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பில் கட்டட நிர்மாணத்துறையில் பணியாற்றும் அவர் கிளிநொச்சியில் தனிமையில் வசித்து வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

பக்கம் 02

## சிங்கள மக்கள் மீது மலம் கழிக்காதீர்!

### முஸ்லிம் இனவாதிகளுக்குத் துணைபோகாதீர்; அரசுக்கு 'சிங்களே' அமைப்பு கடும் எச்சரிக்கை



பெரும்பான்மை சிங்கள மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ அரசு இன்று முஸ்லிம் இனவாதிகளிடம் சிக்கிக்கொண்டு சிங்கள மக்கள் மீது மலம் கழிக்கின்றது. இந்தச் செயலை இந்த அரசு தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

– இவ்வாறு 'சிங்களே' அமைப்பின் பொதுச்செயலாளர் மடில்லே பன்னலோக தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்த தாவது:-

சிங்கள வாக்குகள் மூலம் ஆட்சி அமைத்த

பக்கம் 02



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தந்திரோபாயம்.

ஆனால், தமிழ்த் தேசியம்' என்று வாய்கிழிய கதைவிடும் சைக்கிள் கட்சி, செயலில் மட்டும் தேசிய விரோத செயற்பாடுகளுக்குத் துணை போகின்றது.

அரசுடன் எப்போதுமே கூட்டுச்சேர்ந்து நிற்கும் ஈ.பி.டி.பியை யாரும் தமிழ்த் தேசியக் கட்சி என்று அழைப்பதோ, ஏற்பதோ கிடையாது.

உள்ளூராட்சி சபைகளில் பெயருக்காவது தமிழ்த் தேசியம் என்று பேசும் தமிழ்க் கூட்டமைப்பை விழுத்துவதில் கங்கணம் கட்டி நிற்கும் சைக்கிள் கட்சிக்காரர்கள், பிற இடங்களில் தமிழ்த் தேசியத்துக்கு மாறான ஈ.பி.டி.பி. நிலை பெறுவதற்கு தந்திரோபாயமாக ஒத்துழைக்கின்றார்கள்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகராளுமன்றத் தலைவர் சமர்ப்பித்த வரவு - செலவுத்திட்டத்தை எதிர்த்து வாக்களித்து, அந்தச் சபையில் கூட்டமைப்பின் அதிகாரத்தை வீழ்த்த முயன்ற சைக்கிள் கட்சி, நேற்று வேலணை பிரதேச சபையில் வாக்களிக்காமல், வழமை போல 'ஒளித்து' விளையாடி அங்கு ஈ.பி.டி.பியின் நிர்வாகத்தைக் காப்பாற்றத் தவறவில்லை.

இதுதான் சைக்கிள் கட்சியின் இரட்டை வேடம்.

வேலணை பிரதேச சபையில் மொத்தம் இருபது உறுப்பினர்கள். கூட்டமைப்பு - 08, ஈ.பி.டி.பி - 06, பொஜன பெரமுன - 02, ஐ.தே.க, தமிழர் விடுதலைக் கூட்டணி, சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன தலா ஓரிடம்.

தவிசாளர் தெரிவின்போது–

தமிழர் விடுதலைக் கூட்டணியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் நடுநிலை வகிக்க(அல்லது வழமை போல 'ஒளிக்க') –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எண்மருடன்ஐ.தே.கட்சியின்ஓர்உறுப்பினர் ஒரு பக்கமாகவும் –

ஈ.பி.டியின் அறுவருடன், பொதுஜன பெரமுனவின் இருவரும், சுதந்திரக் கட்சியின் ஒருவரும் என மற்றொரு புறமாகவும் –

பிரிந்து நின்று வாக்களிக்க, இரு தரப்புகளுக்கும் சரிசமமாக ஒன்பது வாக்குகள் கிடைத்தன.

அதனால் பூவா, தலையா சுண்டிப் பார்த்ததில் அதிர்ஷ்டம் ஈ.பி.டி.பிக்குக் கிட்டியது.

நேற்று வரவு - செலவுத்திட்டத்தில் ஈ.பி.டி.பியை வீழ்த்த வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால் சங்கரி ஐயாவின் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த ஒரே உறுப்பினர் திடீரென ஈ.பி.டி.பி பக்கம் சாய்ந்து வாக்களிக்க 10 - 09 என்ற அடிப்படையில் வரவு - செலவுத் திட்டத்தையும் நிறைவேற்றி வேலணையில் தமது நிர்வாகத்தையும் தப்ப வைத்தது ஈ.பி.டி.பி.

பருத்தித்துறை நகர சபையில் கூட்டமைப்புக்கு எதிராக வாக்களித்து அதனை வீழ்த்த முயன்ற சைக்கிள்காரர்கள், வேலணையில் 'ஒளித்துப்' பிடித்து விளையாடி, ஈ.பி.டி.பி. ஆட்சியைத் தக்க வைப்பதை உறுதி செய்துள்ளனர்.

தவிசாளர் தெரிவு சமயத்திலேயே, தங்களை மட்டும் 24 கரட் சுத்தத் தங்கம் எனக் கருதும் 'சுய மிதப்பு' போக்கிலிருந்து விலகி - மற்றையோரை தீண்டத் தகாதவர்களாகக் கருதும் அரசியல் முட்டாள்தனத்திலிருந்து விடுபட்டு – கொஞ்சம் அரசியல் அறிவுடன் சைக்கிள்காரர்கள் செயற்பட்டிருந்தால் தமிழ்த் தேசியம் பேசும் தரப்புகளின் கையை விட்டு உள்ளூராட்சி சபைகள் செல்வதைத் தவிர்த்திருக்கலாம்.

சைக்கிள் கட்சிக்காரர்களின் 'அதிமேதாவித்தனமான' வியாக்கியானங்களும், நடத்தைகளும், கொள்கைக் கூற்றுகளும் கடைசியில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான சக்திகள் தமிழர் தாயகத்தில் காலூன்றவே வழி செய்யும் என்பது திண்ணம்.

2010 முதல் 2015 வரை கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக எம்.ஏ. சுமந்திரன் செயற்பட்ட போது அவரைப் 'பின் கதவால் எம்.பியானவர்' என்று கூறிய சைக்கிள் கட்சிப் பிரமுகர் கஜேந்திரன் இன்று அதே வழியால் எம்.பியாகி அரசியல் செய்கின்றார்.

2004 முதல் 2010 வரை அவர் எம்.பி. பதவியை வகித்தமை கூட அந்த வழியால் என்பதுதான் சங்கரியின் குற்றச்சாட்டு.

எப்படியும்எம்.பியாகவந்துவிட்டுப்போகட்டும். அதிகப்பிரசங்கித்தனம், அதிமேதாவித்தனம் மற்றும் விதண்டாவாதங்கள் பேசுவதை விடுத்து, யதார்த்த அரசியல் செய்ய அவர்கள் விழையவேண்டும்.

சாத்தியமில்லாத – யதார்த்ததில் எட்ட முடியாத – கொள்கைகளைப் பற்றி நின்று மிச்ச சொச்சம் இருக்கின்ற தமிழ்த் தேசியத்தையும் இழக்காமல் பார்த்து கொள்ள வேண்டும்.

கடைசியில் பட்டு வேட்டிக்கு ஆசைப்பட்டு கட்டியிருக்கின்ற கோவணத்தையும் இழக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கொள்கைப் பற்று என்ற பெயரில் சாத்தியமற்ற கற்பனை உலகில் – கனவுலகில் – சஞ்சரித்தபடி அரசியல் செய்வோருக்கு இது எங்கு விளங்கப் போகின்றது?

– மின்னல் –

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
முன்னெடுக்கும் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை. தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்த முறையான நடவடிக்கைகளைஎடுக்காமல்–சரியானபொறிமுறையை வகுக்காமல் அரசு இருந்தால் எதிர்வரும் நாட்களில் நாடு பேராபத்தைச் சந்திக்க வேண்டி வரும். நாடு முழுவதையும் தொடர்ந்து முடக்க வேண்டிய நிலைமை உருவாகும்.

தற்போது கொரோனாவால் வீடுகளுக்குள்ளேயே மக்கள் இறக்கின்றார்கள். பிரேத பரிசோதனைகளின்போதே அவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படுகின்றது. இதனால் நாடெங்கிலும் வீடு வீடாகச் சென்று பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளை சில மணி நேரத்துக்குள் வெளியிடுவதற்கான ஒரு பொறிமுறையை அரசு உடனடியாக வகுக்க வேண்டும். இல்லையேல் கொரோனா வைரஸ் பரவுவதை உடன் கட்டுப்படுத்துவது கடினமாகும் – என்றார்.

## கோப்பாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வருகின்றனர்.

அதே நேரம் கொழும்பில் இலங்கையரும் நோய்த்தாக்கத்திற்கு இலக்காவதனால்தெற்கு வைத்தியசாலைகள் அனைத்தும் நோயாளர்களினால் நிரம்பியுள்ளது.

கொழும்பில் தங்கி நின்று பணியாற்றிய பல வெளிநாட்டவர்களிற்கும் தற்போது கொரோனா தொற்றுப் பரவ ஆரம்பித்த நிலையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கோப்பாயில் உள்ள கல்வியல் கல்லூரியில் இயங்கும் கொரோனா வைத்தியசாலையில் 50ற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் கொழும்பு மாநகர சபையின் ஓர் ஒப்பந்தப் பணியில் ஈடுபட்ட 40 இந்திய தொழிலாளர்களும் கொரோனா நோய்த் தாக்கத்திற்கு இலக்கான நிலையில் கோப்பாய் கல்வியல் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னதாக இரண்டு பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில் இவர் மூன்றாவது நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்த அரசு தங்களுடைய பொறுப்பை மறந்துவிட்டு செயற்படுகின்றது. இதனால் சில சிக்கலான நிலை ஏற்பட வாய்ப்புள்ளது.

கொரோனாத் தொற்று ஏற்பட்டு உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அவர்களது மத அனுஷ்டானங்களுக்கு அமைய அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படுவதன் நோக்கம் என்ன?

இந்த நாட்டில் வாழும் ஏனைய மதத்தவர்களின் உடல்களையும் கொரோனாத் தொற்று சட்டத்துக்கு அமைய தகனம் செய்யும்போது ஓர் இனத்துக்கு மாத்திரம் எவ்வாறு முன்னுரிமை வழங்கிச் செயற்பட முடியும்?

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்று கூறிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் இனவாதிகளுக்கு மட்டும் இந்த அரசு எவ்வாறு நளினப்போக்கைக் கடைப்பிடிக்கின்றது என்பது பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது – என்றார்.

## மேல் மாகாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதற்கமைய நேற்றிரவு 8 மணி முதல், எதிர்வரும் 15ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை மேல் மாகாணத்திலிருந்து ஏனைய மாகாணங்களுக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது எனக் கொரோனாப் பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

அந்தவகையில், நேற்று நள்ளிரவு முதல் எதிர்வரும் 15ஆம் திகதி நள்ளிரவு வரை, மேல்மாகாணத்துக்கு பஸ்கள் போக்குவரத்து செய்வதற்கும், அங்கிருந்து வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தேசிய போக்குவரத்து சபை (இ.போ.ச.) அறிவித்துள்ளது.

ஜனாதிபதிதலைமையிலான நேற்றைய கூட்டத்தின்போது கொரோனா பரவல் மற்றும் அதனைக் கட்டுப்படுத்தல் தொடர்பான தற்போதைய நிலை குறித்தும் எதிர்காலத்தில் எழக்கூடிய வைரஸுடன் தொடர்புடைய நோய்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் ஆராயப்படவேண்டிய துறைகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை கொவிட் நோய்த்தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஏனைய நாடுகளைப் போன்று எமது நாட்டிலும் பதிவாகியுள்ள கொரோனா மரணங்களின் எண்ணிக்கையில் 93 வீதமானவற்றுக்கு காரணம் தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதாகும் என்று வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இருதய நோய், நீரிழிவு, சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மிக வேகமாக கொரோனா நோய்த்தொற்றுக்கு உள்ளாகின்றனர். பெரும்பாலானவர்கள் நோய் அறிகுறிகள் இன்றியே மரணத்தை தழுவியுள்ளனர். பின்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது கொரோனா நோய்த்தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி தொற்றாத நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைபாதுகாப்பதற்கும்கொரோனா நோய்த்தொற்றிலிருந்து விலகியிருப்பதற்கும் தேவையான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதான வைத்தியசாலைகளுக்கு வருவதில் மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களை இனம்கண்டு ஒரு காலத்தில் நாடு பூராகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேச மருந்தகங்களை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். அதற்குத் தேவையான மருத்துவர்கள், தாதிகள் மற்றும் ஏனைய பணிக்குழாமினரை உடனடியாக நியமிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு பொருள்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்படும் தரப்பினர் சரியாக நடைமுறைகளை பேணுகின்றனரா என்பதை தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டும். அப்பிரதேசங்களிலிருந்து உட்செல்வதற்கோ வெளியேறு வதற்கோ எவருக்கும் இடமளிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சிறைச்சாலைகளின் நிலைமைகள் மற்றும் நோய்ப்பரவலை தவிர்ப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரேமனாத் சீ தொலவத்த, பிரமித பண்டார தென்னகோன், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் கொரோனாத் தடுப்பு செயலணி உறுப்பினர்களும் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

## நேற்றும் 5 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொழும்பு 10, மாளிகாவத்தையைச் சேரந்த, 68 வயதான பெண் ஒருவர் தனது வீட்டிலேயே நேற்று மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். அவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாணந்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயது ஆண் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். பொலிஸ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்த குறித்த நபருக்கு, மேற்கொண்ட பிரதேத பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு 11, புறக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த, 40 வயது ஆண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். அவரது பிரேத பரிசோதனை அறிக்கையில் கொரோனாத் தொற்று செய்யப்பட்டுள்ளது.

களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த, 45 வயதான ஆண் ஒருவர், கொரோனாத் தொற்றாளர் என அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து, கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி அம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார். இந்த நிலையில், கொரோனாத் தொற்று உக்கிரமடைந்ததால் ஏற்பட்ட மாரடைப்பால் அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

(முன்னர் வந்த செய்தி 10 ஆம் பக்கத்தில்)

## நேற்றும் 635...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 350 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றாளர்களில் 5 ஆயிரத்து 121 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 10 ஆயிரத்து 183 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 46 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்



### கோணையா தியாகராசா

கொய்யாத்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கோணையா தியாகராசா (ஓய்வுபெற்ற பிரதம தபால் அத்தியட்சகர், சமாதான நீதவான், முன்னாள் பொருளாளர் - AROD, கொய்யாத்தோட்ட சனசமூகநிலைய முன்னாள் தலைவர்) அவர்கள் 12.11.2020 இன்று அதிகாலை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:—குடும்பம்.
தொடர்புகளுக்கு:—0212226896, 0776779274

காலைக்கதிர்
Kalaikkathir

# பிரதேச மட்டத்தில் கொரோனா வைத்தியசாலை அமைக்க ஆராய்கின்றது சுகாதார அமைச்சு!



கொழும்பு, நவ.12

எதிர்வரும் காலங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்திசாலைகளை மேலும் ஒதுக்கீடு செய்வது தொடர்பில் சுகாதார அமைச்சு ஆராய்ந்துவருகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு அடுத்தகட்டமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதற்காக சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டிருக்கும் விசேட ஆராய்வுக் குழு நேற்று புதன்கிழமை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் கூடியமையுடன் இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாக உறுதிசெய்யப்பட்டுள்ள நோயாளர்களை அவர்களுடைய நோய்நிலைமையின் தீவிரத் தன்மையின் அடிப்படையில் உரிய வைத்திசாலைகளுக்கு அனுப்பிவைப்பதற்காகத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இனிவரும் காலங்களில் பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான வைத்திசாலைகளை ஒதுக்கீடு செய்தல், கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் அதேவேளை ஏனைய நோய்கள் காரணமாக வைத்தியசாலைகளில் சேர்க்கப்படுபவர்களுக்கு அவசியமான சிகிச்சைகளை மேலும் வலுப்படுத்தல், நோயாளர்களும் சுகாதாரப் பிரிவு ஊழியர்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களை உளவியல் ரீதியில் மேலும் ஸ்திரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் இணையவழியில் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பாகவும் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் எதிர்காலத்தில் வைரஸ் பரவல் மேலும் அதிகரிக்கும் பட்சத்தில் அதனை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்களைச் செய்வது பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.பல்கலை மருத்துவ பீடத்தில் பி.சி.ஆர். பரிசோதனை ஆரம்பம்!

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று (புதன்கிழமை) முதல் மீண்டும் பி.சி.ஆர். பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுளளன.

மருத்துவ பீடத்தின் வழக்கமான பணிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாத வகையில் பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வு கூடம் மருத்துவ பீடத்தில் இருந்து பிரிக்கப்பட்டு, தனியான பாதை அமைக்கப்பட்டுள்ளதுடன், சர்வதேச நுண்ணுயிரியல் ஆய்வுத் தர நியமங்களுக்கமைய பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெறுகின்றன..

மருத்துவ பீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்களான அ.முருகானந்தன், மு.கலாமதி மற்றும் பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் மட்டுமே இந்தப்பரிசோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுடன் பணியாற்றுவதற்கென யாழ். பல்கலைக்கழகத்தால் நான்கு நுண்ணுயிரியல் ஆய்வு கூடவியலாளர்களும் புதிதாகப் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

வடக்கில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றமையால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி.சி.ஆர்.பரிசோதனைகளைமேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் குறித்து தொடர்பான ஆராய்வதற்கான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றது.

இதன்போதே யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பரிசோதனைகளை மீண்டும் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதேநேரம், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்ய முடியும்.

மருத்துவ பீடத்தால் மேற்கொள்ளப்படும் பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகள் தினமும் மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எஸ்.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

## கடலோர ரயில் பாதையின் ஒரு வழித்தடம் மூடப்பட்டது!

கொழும்பு, நவ.12

கடலோர ரயில் பாதையின் ஒரு வழித் தடத்தை தற்காலிகமாக மூட ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, நேற்றும் (புதன்கிழமை) இன்று மற்றும் நாளை கரையோர மார்க்கத்தின் பாணந்துறை வரையிலான ஒரு வழித் தடம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொள்ளுப்பிட்டியிலிருந்து பம்பலப்பிட்டி வரையான ரயில் பாதையில் மேற்கொள்ளப்படவுள்ள அவசர திருத்தப்பணிகளுக்காக இந்த ஒரு வழித் தடம் மூடப்பட்டிருக்கும் என ரயில்வே கட்டுப்பாட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் காரணமாக அந்தப் பகுதிக்கான பல ரயில் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

## உயிரிழந்த முஸ்லிம்களின் சடலம் அடக்க விவகாரம் சிறுபான்மை உரிமைகளை அரசு மதிக்க வேண்டும்!

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தல்

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யும்போது மத சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் மதிக்கவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்படுவதற்கு முஸ்லிம் சமூகம் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையிலேயே மன்னிப்புச்சபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை அரசாங்கம் பின்பற்றவேண்டும் எனவும் அந்தசபைவேண்டுகோள்விடுத்துள்ளது.

# எல்லை மீறும் தமிழக மீனவர்களுக்கு கொரோனாவே பாதுகாப்புக் கவசம்!



## தொற்று, தனிமைப்படுத்தலுக்கு அஞ்சி அவர்களை கைது செய்யப் பின்னடிக்கும் இலங்கைக் கடற்படை





(ந.லோகதயாளன்)

இந்தியா மீனவர்களின் படகுகள் இலங்கைக் கடற்பிரதேசத்தில் எத்தகைய சட்டவிரோத செயலில் ஈடுபட்டாலும் உடனே திருப்பி அனுப்பி விடுவது என்று முடிவெடுத்தால் அவர்கள் எல்லை தாண்டுவதும் கடத்தலில் ஈடுபடுவதும் அதிகரிக்கும் என இங்குள்ள மீனவ சங்கங்கள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

இவ்வாறு கடந்த மூன்று தினங்களுக்குள் 3 படகுகளில் ஊடுருவிய 22 இந்திய மீனவர்களை கடற்படையினர் உடனடியாகவே விடுவித்திருக்கின்றனர் .

கைது செய்யப்படக் கூடிய – கைது செய்யப்பட வேண்டிய – தவறிழைக்கும் இந்திய மீனவர்களை அதற்கான சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தும்போது, கொரோனாமுன்னெச்சரிக்கையாக முதலில் அவர்களை 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும். அதேசமயம் அந்த இந்திய மீனவர்களைக் கைது செய்த மற்றும் அழைத்து வந்த கடற்படையினரும் கூடத் தனிமைப்படுத்தலுக்கு உட்பட வேண்டி வரும். இந்த அச்சம் – நெருக்கடி – காரணமாகவே, இந்திய மீன்வர்கள் இலங்கைக் கடற்பரப்பில் சட்டத்தை மீறினாலும் அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை எடுக்காமல் கடற்படையினர் திருப்பி அனுப்புகின்றனர் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலைமையினால் இந்தியாவின் இராமஸ்வரத்தில் இருந்து திங்களன்று ட்றோலர் மீன்பிடிப் படகில் புறப்பட்ட நான்கு மீனவர்கள் அதிக அலை காரணமாக திசை மாறி வந்துவிட்டனர் எனக் கூறி கட்டைக்காடு பிரதேசத்தில் கரை ஒதுங்கிய சமயம் கடற்படையினர் அவர்களைக் கைது செய்து காங்கேசன்துறை முகாமிற்கு கொண்டு வந்தனர். எனினும் சட்ட நடவடிக்கை எடுக்காமல் திரும்பிப் போக விட்டுவிட்டனர். இதேபோன்று முல்லைத்தீவு சாலைப்பகுதிக்கு மிகப் பெரும் ட்றோலரில் வந்தடைந்த 14 இந்திய மீனவர்களும் திரும்பிப் போக ஏற்பாடு செய்யப்பட்டது.

இதேபோன்று மன்னார் அரிப்பு பகுதியில் ட்றோலரில் ஊடுருவி மஞ்சள் விற்பனையில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்களும் கூட சட்ட நடவடிக்கை ஏதுமின்றிப் பத்திரமாகத் திருப்பி அவர்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எல்லை மீறும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கொரோனா பீதியில் நெருங்க மாட்டார்கள், கைது செய்யாது திருப்பி அனுப்புகின்றனர் என்ற செய்தி இந்தியாவில் பரவி விட்டது. அதனால் அவர்கள் அதிகளவில் ஊடுருவுகின்றனர். இதனைத் தடுக்க கடற்படையினரும் மீன்பிடி அமைச்சும் உரிய நடவடிக்கை மேற்கொண்டே ஆக வேண்டும் இலங்கை மீனவர்கள் தரப்பில் விசனத்துடன் கூறப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## என்ன செய்யும் பைடன் அரசு?

அமெரிக்க அதிபர் தேர்தல் முடிவுகள் தொடர்பான சர்ச்சைகள் நீடித்தாலும் – தற்போது பதவியில் இருக்கும் டொனால்ட் ட்ரம்ப் என்ன குதி, குதித்தாலும் – ஜனவரி 20ஆம் திகதி ஜோ பைடன் – கமலா ஹரிஸ் இணை புதிய ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதி பதவியேற்பதில் பெரும்பாலும் மாற்றம் ஏதும் இருக்காது என்றே நம்பப்படுகின்றது.

அமெரிக்க அதிபர் பதவி மாற்றம் – குடியரசுக் கட்சியினர் வசம் இருந்து ஜனநாயகக் கட்சியினர் வசம் அதிகாரம் மாறுவது – நம் இலங்கைத் தீவில் எத்தகைய அரசியல், களநிலை மாற்றங்களைக் கொண்டு வரும் என்பது அவதானிப்புக்குரியது.

தற்போதைய டிரம்ப் நிர்வாகத்தினதும், இனி வரப்போகின்ற ஜோ பைடன் நிர்வாகத்தினதும் இலங்கை தொடர்பான அணுகுமுறை இரண்டு முரணிலை அடிப்படைகளைக் கொண்டதாக அமையும் என அனுமானிக்க முடியும்.

அமெரிக்க வெளிவிவகாரம் இலங்கையைக் கையாளும் விடயத்தில் இங்கு இடம்பெற்ற இரண்டு அடிப்படை அம்சங்களே முக்கியமானவை.

ஒன்று – யுத்தத்தின் போது நிகழ்ந்தவை.

மற்றது – யுத்தத்தின் விளைவாக நிகழ்ந்தவை.

முதலாவது விடயத்தை இலங்கை விவகாரத்தில் முக்கிய அம்சமாக முன்னைய ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி நிர்வாகம் கையாண்டது.

மற்றைய விடயத்தைப் பின்னர் வந்த ஜனாதிபதி ட்ரம்பின் குடியரசுக் கட்சி நிர்வாகம் தன் உத்தியாகப் பயன்படுத்தியது.

யுத்தத்தின் போது நிகழ்ந்தவை என்ன என்பது நமக்குத் தெரியும். இறுதி யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான அட்டூழியங்கள் போன்றவைதான் அவை.

அடுத்தது – யுத்தத்தின் விளைவாக ஏற்பட்டது யாது?

முப்பது ஆண்டு காலம் நாட்டை ஆட்டிப்படைத்த யுத்தத்தினால் பேரிழப்புகளும், போரிழப்புகளும் நேர்ந்தன. நாட்டின் பொருளாதாரமே சரிந்து வீழ்ந்தது. அந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காக உலக நாடுகளிடம் கையேந்திக் கடன்களை வாங்கிக் குவித்த இலங்கைத் தீவு, அதனால், பெரும் பொருளாதார, நிதி நெருக்கடிக்குள் மூழ்கிக் கிடக்கின்றது. இந்தச் சிக்கலில் இருந்து மீள்வதற்காக சீனாவின் காலடியில் அடிபணிந்தது கொழும்பு.

இந்த வாய்ப்பை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சீனா, தனது *'அரவணைத்து அமுக்கும் பண்பியல்பு'* கொள்கையின்படி இலங்கையை மெல்ல மெல்ல தனது கட்டுப்பாட்டில் கபளீகரம் செய்து நிற்கின்றது.

சர்வதேச உறவு நிலையில் சீனா பக்கம் அதீதமாக இலங்கை நெருங்கிச் சென்ற போது 2009 முதல் 2017 வரை பதவியில் இருந்த பராக் ஒபாமா – ஜோ பைடன் இணையின் ஜனநாயக் கட்சி அரசு அது விடயத்தில் இலங்கைக்கு அதிக அரசியல் அழுத்தம் எதையும் கொடுக்கவில்லை.

மாறாக, இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் குறித்தே அது அதிக சிரத்தை – கரிசனை – காட்டியது.

தமிழர்களுக்கு எதிராக யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் சர்வதேச தரத்திலான நீதிப் பொறிமுறை மூலம் விசாரணை நடத்துதல், பொறுப்புக் கூறலை நிலை நாட்டுதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்துதல், இழப்பீடுகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கி வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தை இலங்கையுடனும் ஏனைய சர்வதேச நாடுகளுடனும் முன்னின்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டு வரச் செய்து நிறைவேற்றி, அதன் மூலம் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிக்கும் பணியை ஒபாமா அரசே முன்னெடுத்தது என்பது மறக்கக் கூடியதல்ல.

ஆனால், டிரம்ப் அரசோ தான் அதிகாரத்துக்கு வந்ததும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் இருந்தே அமெரிக்காவை வெளியேற்றி, அந்த விடயங்களை எல்லாம் ஒரேயடியாகக் கிடப்பில் போட்டு விட்டு, சீனாவுடன் பொருளாதார யுத்தத்தைத் தொடுத்தது. சீனாவுடன் பொருளாதார ஈடுபாடு காட்டிய – இலங்கை உட்பட – சகல நாடுகளுடனும் தனது விரோதத்தைப் பகிரங்கமாகவே அது வெளியிட்டது.

டிரம்ப் அரசு ஜனவரி 20ஆம் திகதி பதவி விலகி, ஜோ பைடனின் அரசு அதிகாரத்துக்கு வந்ததும் மீண்டும் காட்சி மாறும்.

ஜனவரி 20இல்தான் அந்த அரசு பதவியேற்கும். ஐ. நா மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்த கூட்டத் தொடர் மார்ச்சில் நடைபெறும். இலங்கை விவகாரம் அந்தக் கூட்டத்தில்தான் மீள எடுக்கப்படவிருக்கின்றது. இலங்கைக்கு வழங்கப்பட்ட கடைசி இரண்டு வருட கால அவகாசம் அப்போதுதான் முடிவடைகின்றது.

இலங்கையைப் பொறுத்தவரை அது மிகவும் இக்கட்டான ஒரு கூட்டம். ஆனால், ஜனவரி 20ஆம் திகதி அதிகாரத்துக்கு வரும் புதிய அமெரிக்க அரசினால் மார்ச் மாதத்துக்கு இடையில் மீளவும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குள் நுழைந்து விடமுடியாது என்பது இலங்கைக்குச் சாதகமான விடயம்.

என்றாலும் புதிய அமெரிக்க அரசு, அது பதவியேற்று குறுகிய காலம் என்றாலும், ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வரும் மார்ச்சில் நடைபெறும் கூட்டத்தில் மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கைக்கு எதிராக இறுக்கமான போக்கை பின்னணியில் நின்று செயற்படுத்திக் காட்டும் என்றே பலரும் எதிர்பார்க்கின்றனர்.

# கொரோனா பரவலுக்கான பொறுப்பை அரசே ஏற்கவேண்டும்! - ஜே.வி.பி.



கொரோனா வைரஸ் பரவலுக்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்கவேண்டும் என ஜே.வி.பி.யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா வைரஸ் பரவலுக்கு பொதுமக்கள் மீதும் ஊடகங்கள் மீதும் அரசாங்கம் பழிபோட முயல்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான இறுக்கமான திட்டங்கள் இல்லாததன் காரணமாக பொதுமக்கள் பெருமளவு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் தருணத்தில் அரசாங்கம் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டுள்ளது எனக் குற்றம்சாட்டியுள்ள அவர், தற்போதைய நிர்வாகம் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கும் தவறியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களுக்கு சலுகைகளை வழங்குவதற்குப் பதில் அரசாங்கம் இந்த இக்கட்டான தருணத்தில் இலாபம் சம்பாதிக்க முயல்கின்றது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# மனித எச்சம், இலக்கத் தகடு முல்லைத்தீவில் கண்டெடுப்பு!

முல்லைத்தீவு, கரிப்பட்ட முறிப்புப் பகுதியில் மனித எச்சங்கள், கைக்குண்டு மற்றும் தோட்டாக்கள் நேற்று புதன்கிழமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய குறித்த இடத்தில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் விடுதலைப் புலிகளின் இலக்கம் பொறிக்கப்பட்ட தகடுகள், உடைகள் போன்றனவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, கரிப்பட்ட முறிப்புப் பகுதியில்வயல்நிலத்தைஉழுதுபயிர்செய்கையில் ஈடுபட்ட விவசாயி ஒருவர் வரம்பு கட்டும்போது மனித எச்சங்கள் இருக்கின்றமையை அவதானித்தமையை அடுத்து மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார்.

இந்நிலையில், அந்த இடத்துக்கு விஜயம் செய்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் அந்த இடத்தைப் பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் சட்ட வைத்திய அதிகாரியின் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

இதன்படி, நீதிவான் விசாரணைகள் முடிவடைந்து சம்பவ இடத்துக்கு சென்றிருந்த சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தடயவியல் பொலிஸாரும் இணைந்து அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, சம்பவ இடத்தில் மனித உடல் பாகங்கள், எலும்புகள் மற்றும் உடைகள், துப்பாக்கி ரவைகள், கைக்குண்டு என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் 'த.வி.பு – ஐ 1606' என்ற இலக்கம் பொறிக்கப்பட்ட இரண்டு தகடுகளும் கண்டெடுக்கப்பட்ட நிலையில் இந்தப் பொருள்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

# பவித்ராவுக்கு எதிராக வருகிறது நம்பிக்கையில்லாப் பிரேரணை!

சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது என்று சிங்கள இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



குறித்த பிரேரணையில் சில எம்.பிக்கள் நேற்று கையொப்பமிட்ட நிலையில் ஏனையோர் நாளை கையொப்பமிடுவார்கள் எனவும் தெரியவருகின்றது.

கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்காமை, மக்கள் மத்தியில் தவறான தகவல்களை வெளியிட்டமை உட்பட மேலும் சில குற்றச்சாட்டுகளை அடிப்படையாகக்கொண்டே குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படவுள்ளது.

# லேடி றிஜ்வே வைத்தியசாலையில் 56 பேருக்குத் கொரோனா தொற்று!

கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதுவரையில் 56 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதில் 46 பேர் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் அடங்குகின்றமையுடன், ஏனைய 10 பேரில் 05 வைத்தியர்கள், 02 தாதியர்கள் மற்றும் 03 சிற்றூழியர்கள் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர்கள் அனைவரும் ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதேநேரம் மேலும் 90 வைத்தியசாலை ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலைக்கு வருபவர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த தீர்மானித்துள்ளதாகக் கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர், விசேட வைத்திய நிபுணர் ஜீ. விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை - 2020
'மரங்களின் மத்தியில் செலவழிக்கும் நேரம் ஒருபோதும் வீணடிக்கப்படுவதில்லை.'
- கத்ரீனா மேயர் (அமெரிக்க எழுத்தாளர்)

# மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினை பற்றி அரசுக்கு அக்கறை இல்லை!

## குற்றஞ்சாட்டுகிறார் உமாசந்திரா பிரகாஷ்



கொவிட் 19 தாக்கத்தின் விளைவாக மக்களின் பொருளாதாரம், வாழ்வாதாரம் மற்றும் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசாங்கம் எவ்வித தீர்வையும் காண்பதற்கு அக்கறை கொண்டிருக்கவில்லையென எதிர்க்கட்சி தலைவரின் இணைப்புச் செயலாளர் உமாசந்திரா பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களின் வருமானம் நிரந்தர தொழில், பகுதி நேர தொழில் என பலவாறு தங்கியுள்ளது.

கொவிட் 19 தாக்கத்தின் காரணமாக பலருக்குத் தொழில் இழப்பு ஏற்பட்டுள்ள அதேவேளை, நாட்டின் பொருளாதாரமும் வீழ்ச்சியடைந்திருக்கின்றது.

குறிப்பாக அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளின் காரணமாகதத் தமிழ் மக்களின் உணவுப்பழக்கங்களில் இறுக்கமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் இயற்கையான கிருமி நாசினியாக மஞ்சள் பயன்படுத்தப்படுகின்றது.

ஆனால், தற்போது மஞ்சள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதன் காரணமாக சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு மஞ்சள் கொண்டுவரப்படுகின்றது.

இதனால், கொவிட் 19 தாக்கத்தின் பரவலும் அதிகமாகக் காணப்படுகின்றது.

எனவே, உணவுப் பொருள்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற இறக்குமதி தடையை அரசாங்கம் நீக்கி அவை நியாயமான விலையில் மக்களுக்கு சென்றடைவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

உள்நாட்டில் உற்பத்திகள் அதிகரித்த பின்னர் இறக்குமதிக்கான தடையை விதிக்கலாம்.

அந்தப் பொருள்களுக்கு மக்கள் அதிகமான விலையைச் செலுத்துவதன் காரணமாக மக்களுக்குத் தேவையில்லாத சுமை ஏற்படுகின்றது.

அரசாங்கம் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை மக்களுக்கு வழங்குவதாக குறிப்பிட்டாலும் அந்த பொருள்களுக்கான விலையை கணக்கிட்டுப் பார்த்தால் சந்தேகம் எழுகின்றது.

மறுபுறம் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்குவதிலும் அரசியல் இருக்கின்றது.

கொடுப்பனவை யார் வழங்குவதென்பதை உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களுமே தீர்மானிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அது உரிய முறையில் சென்றடைவதில்லை.

அதேவேளை கொரோனா தொற்று தொடர்பான உண்மைத்தன்மையை அரசாங்கம் மறைக்கின்றதோ என்ற சந்தேகம் எழுகின்றது.

யுத்த வெற்றி மாதிரியான வெற்றியை கொவிட் தொற்றில் எம்மால் எதிர்கொள்ள முடியாதுள்ளது.

எனவே, இவற்றின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்துக்கு யார் பொறுப்புக் கூறுவது?

அரசால் கொண்டுவரப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைகள் சட்ட ரீதியில் காணப்படுகின்றனவே தவிர, மக்களுடைய கொள்வனவு செயற்பாட்டில் அவை ஆதிக்கம் செலுத்தவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

## பஸ் கட்டணங்கள் யாவும் நேற்று முதல் அதிகரிப்பு!

அரச, தனியார் பஸ்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

கொவிட் – 19 தொற்று அபாய நிலைமை காரணமாக நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் 1.2 வீதத்தால் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படுவதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சின் தீர்மானத்துக்கு அமைய குறைந்தபட்ச பஸ் கட்டணம் 12 ரூபாயில் இருந்து 14 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் பஸ்களில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைவாக மாத்திரமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆறு லட்சம் மக்கள் வாழும் கொழும்பில் 30 ஆயிரம் பேருக்கு கொரோனா அபாயம்!

கொழும்பு நகர சபைப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள ஆறு லட்சம் அளவிலான மக்களுள் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை 30 ஆயிரமாக உயர்வடைய வாய்ப்புள்ளதாகக் கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார மருத்துவர் றுவன் விஜயமுணி தெரிவித்துள்ளார்.

எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட 400 பி.சி.ஆர். பரிசோதனையில் 19 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் அண்ணளவாக நூற்றுக்கு 5 வீதமான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

அந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் 30 ஆயிரம் பேர் வரையில் வைரஸ் தொற்றுடன் இருக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் குறித்த தொற்றாளர்களிடமிருந்து தொற்றுப் பரவுகின்றதா அல்லது உடலிலே உள்ளதா என்பதைத் தீர்மானிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்கா தனது விருப்பத்தை ஏனைய நாடுகள் மீது திணிக்காது!

அமெரிக்கா தனது விருப்பங்களை இலங்கை மீதோ அல்லது வேறு எந்த நாட்டின் மீதோ திணிக்காது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த, அமெரிக்க இராஜாங்க செயலாளர் தெளிவுபடுத்தினார் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகமொன்றுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நண்பன், சகா என்ற அடிப்படையில் தேசிய இறைமை, சுதந்திரம் மற்றும் பேண்தகு அபிவிருத்தியில் அனைவரையும் உள்வாங்கும் அணுகுமுறையை அமெரிக்கா ஊக்குவிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது அந்தக் கொள்கைகளின் பின்னால் அணிதிரளுங்கள் என்ற அழைப்பே தவிர அமெரிக்காவின் நேச நாடுகளுக்கான வேண்டுகோளில்லை என அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் கடற்பயண சுதந்திரத்தை உறுதி செய்வதே அமெரிக்காவின் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியுலர் பிரிவு மீண்டும் திறப்பு!

கொரோனா தொற்றால் ஒரு மாதமாக தற்காலிகமாக மூடப்பட்ட, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியுலர் பிரிவு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) முதல் இந்த அலுவலகம் திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளுக்கு அமைய, பிறப்புச் சான்றிதழ், கல்வி தகுதிச் சான்றிதழ்கள் என்பவற்றை உறுதிப்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகள் இதில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ‘கொரோனா’ தொற்றாளருக்கான சேவையில் ஈடுபட்டு வந்த பஸ் கோர விபத்தில் சிக்கியது!



கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைக் கொண்டு செல்ல இலங்கை இராணுவத்தினர் பயன்படுத்தும் தனியார் சொகுசு பஸ் ஒன்று கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்குள் ளானது.


கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா நோக்கி அதிவேகமாகப் பயணித்த இந்த பஸ்ஸானது வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் சாலையின் நடுவிலிருந்த பாதுகாப்பு வேலியுடன் மோதி இந்த விபத்து ஏற்பட்டது.

கொழும்பிலிருந்து 24.7 கி.மீ. முதல் 24.9 கி.மீ. வரையான கட்டுநாயக்கா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலேயே இந்த அனர்த்தம் நேற்றுமுன்தினம் இரவு 10.05 மணியளவில் இடம்பெற்றது.

விபத்தில் பஸ் சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக நீர்கொழும்பு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

விபத்துக்குள்ளான பஸ் பழுது பார்க்க முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளமையுடன், விபத்தால் நெடுஞ்சாலைக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியாவில் குளம் உடைப்பு பல ஏக்கர் வயல் நாசமாயிற்று





வவுனியா ஊற்றுக்குளம் உடைப்பெடுத்துள்ள நிலையில் பல ஏக்கர் வயல் நிலம் பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பெய்த கடும் மழையின் காரணமாக நெடுங்கேணி பகுதியில் உள்ள குறித்த குளத்திற்கு நீர்வரத்து அதிகரித்த நிலையிலேயே குளம் உடைப்பெடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விவசாய திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில் 24 மணி நேரத்தில் 251 பேருக்குக் கொரோனா உறுதி!

இலங்கையில் புதன் காலை வரையான 24 மணித்தியாலங்களில் 430 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய் யப்பட்டதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தத் தொற்றாளர்களில் கொழும்பிலேயே அதிகளவானவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதன்படி கொழும்பில் 24 மணித்தியாலங்களில் 251 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக கொள்ளுப்பிட்டியில் மாத்திரம் 55 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளனர்.

அதேநேரம் கம்பஹா மாவட்டத்தில் 18 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று களுத்துறையில் 16 கொரோனா நோயாளர்களும் புத்தளத்தில் 6 கொரோனா நோயாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர்.

மேலும் இரத்தினபுரியில் 8 பேருக்கும் கண்டியில் 4 பேருக்கும் கேகாலையில் 7 பேருக்கும் காலியில் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, நுவரெலியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 91 பேருக்கும் சிறைக் கைதிகள் 24 பேருக்கும் கடந்த 24 மணித்தியாலங்களில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# 10 தமிழ்க் கட்சிகளின் கூட்டுக்கு தலைமை வகிக்க மாவையை விட சிறீகாந்தாவே பொருத்தமானவர்

## நீண்டகால ஒற்றுமை கருதி அந்தப் பரிந்துரையை முன்வைக்கின்றாராம் நீதியரசர் விக்னேஸ்வரன்

**‘இவ்வாரம் கொரோனா பற்றிய அக்கறை எம்மைப் பீடித்திருக்கும் போது, மத்திய அரசாங்க அமைச்சர்களின் வருகையின் பின்னர் தமிழர் ஒற்றுமை பற்றிய சிந்தனைகளும் வெகுவாக மேலோங்கி நிற்கின்றன. ஒற்றுமை பற்றிய கேள்வியொன்று கிடைத்துள்ளது.’ – என்ற பீடிகையோடு தமது இவ்வாரத்துக்கான கேள்வி - பதில் அறிக்கையை அனுப்பி வைத்திருக்கின்றார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர்நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி. வீ.விக்னேஸ்வரன். அதன் விவரம் வருமாறு:-**

**கேள்வி:-** நீங்கள் உள்ளதை உள்ளபடி மறைக்காமல் சொல்லும் வல்லமையுடையவர். உண்மையைச் சொல்லுங்கள் – தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்று சேரும் வாய்ப்புண்டா? ஆம் எனில் எவ்வாறு, எப்போது? இல்லையேல் அதற்கென்ன காரணம்?

**பதில்:-** குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக கட்சியினரிடையே ஒத்த கருத்திருப்பின் அதன் பொருட்டு அப்போதைக்கு அவர்கள் ஒன்று சேரும் வாய்ப்பு கட்டாயமாக இருக்கின்றது. ஆனால் நிறுவனமயப்படுத்திப் பயணிப்பதற்குத் தடையாக இருக்கக் கூடியவை சுயநலமும் அகந்தையும் ஆவன. நாம் ஒவ்வொருவரும் எமது கட்சிகளை மட்டும் மேம்படுத்த சுயநலத்துடனும் அகந்தையுடனும் உளங் கொண்டிருந்தால் ஒற்றுமை சாத்தியப்படாது. அதனால் எமது மக்கள் பாதிக்கப்படக்கூடும். ஒன்று சேருவது பற்றி நாங்கள் பேசிக் கொள்வது மக்கள் கோரிக்கையின் நிமித்தமே. அவர்களின் நன்மை கருதியே. மக்கள்தான் ஒற்றுமையை வேண்டி நிற்கின்றார்கள். ஆனால் எமது கட்சிகள் தமது தனித்துவத்தையும் தலைமைத்துவத்தையும் பாதுகாக்கவே முனைகின்றார்கள். ஒவ்வொருவருக்கும் கட்சி நலம் மேலோங்கினால் குறிப்பிட்ட விடய ரீதியான ஒற்றுமை வேண்டும் போது ஏற்படலாம், ஆனால் அவர்களிடையே நிறுவனமயமான ஒன்றிணைந்த பயணத்தை ஏற்படுத்துவது சிரமமாக இருக்கும். ஒவ்வொருவரும் புதிய நிறுவனத்தில் தமக்கென ஒரு முக்கிய இடத்தை வகிக்க முனைவார்கள். புதிய நிறுவனத்தைத் தமக்குச் சார்பாகப் பயணிக்க வைக்க முனைவார்கள்.

பல கட்சிகள் நிறுவனரீதியாக ஒன்றிணைய வேண்டுமானால் 03 முக்கிய விடயங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

அவை:– தலைமைத்துவம், கொள்கைகள், நிறுவன செயற்பாடுகள்.



### தலைமைத்துவம்

தலைமைத்துவம் எனும் போது தலைவரானவர் அறிவு, ஆற்றல், அனுபவம் கொண்டவராகவும் முக்கியமாக அகந்தை அற்றவராகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் மக்கள் நலனைப் பற்றிச் சிந்திப்பார். இல்லையேல் தன் நலம் பற்றியும் தன் கட்சி நலம் பற்றியுமே சிந்திப்பார். என் கருத்துப்படி சட்டத்தரணி ந.சிறிகாந்தா அவர்களே இவ்வாறான கூட்டுக் கட்சியொன்றின் தலைமைத்துவத்திற்குப் பொருத்தமானவர். அவரிடம் மேற்கண்ட குணாதிசயங்கள் எல்லாம் கிட்டத்தட்ட இருக்கின்றன.

எனினும், பல மக்களிடையே அவர் பற்றி ஒரு எதிர்மறையான கருத்து இருப்பதை நான் அறிவேன். அதாவது குற்றஞ் செய்தவர்களுக்காக நீதிமன்றங்களில் தெரிபட்டு அவர்களை விடுவிக்க அல்லது அவர்கள் விடுதலை வாங்க அவர் உதவி வருகின்றார் என்ற முறைப்பாடே அது.

இரண்டு விடயங்கள் இது பற்றி கருத்தில் எடுக்க வேண்டும். ஒன்று கண்ணால் காண்பதும் காதால் கேட்பதும் உண்மையென்று கூற முடியாது. தீர விசாரித்தே உண்மையை அறிய வேண்டும். இரண்டாவது இறைவன் முன்னிலையில் எது உண்மையோ அது தான் சட்டத்தின் முன்பும் உண்மையாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கக்கூடாது. பல கட்டுப்பாடுகள், சட்டக் கொள்கைகளின் அடிப்படையில் எமது சான்றுச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அவற்றிற்கு அமைவாக ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டால்தான் அவரைக் குற்றம் செய்தவர் என்று சட்டம் ஏற்கும். இல்லையேல் விடுதலை செய்துவிடும்.

நான் ஒரு முறை குற்றவியல் வழக்கொன்றைக் கேட்டுக் கொண்டிருந்தேன். ஒரு சாட்சியின் சாட்சியம் மிகவும் ஏற்புடையதாக இருந்தது. வழக்கை நடத்தும் சட்டத்தரணியினதும் எனதும் கேள்விகளுக்கு சற்றும் தயங்காமல் பதில் அளித்தார் அந்தச்சாட்சி. அவர் முகத்தில் எந்தவித சலனமும் இருக்கவில்லை. அவரின் சாட்சியத்தை ஏற்று எதிரியை விடுதலை செய்தேன். பின்னர் பல மாத காலத்தின் பின்னர் மேற்கூறிய எதிரியே குற்றத்தைச் செய்தார் என்ற உண்மையை அறிந்து கொண்டேன். சாட்சி தத்ரூபமாகப் பொய் சொல்லியிருக்கின்றார். எம்மால் அவரின் பொய்யைச் சற்றேனும் அடையாளம் காண முடியவில்லை. சட்டப்படி குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுதலையாகிவிட்டார். இறைவன் சந்நிதியில் அவர் குற்றவாளி.

ஆகவே சட்டத்திற்கு அமைவாகத்தான் குற்றவாளிகளை அடையாளம் காண்கின்றோம்.

சட்டத்திற்கு அமைவாக ஒருவரைக் குற்றவாளியாகக் காணமுடியாத இடத்து எதிரி விடுதலை செய்யப்படுகின்றான். உண்மையை அறிந்த மக்கள் ஏமாற்றமும் ஆத்திரமும் அடைகின்றனர். மக்களின் ஆத்திரத்தை ஒரு சட்டத்தரணி சம்பாதித்துக் கொள்கின்றார் என்றால் அவர் சட்டத்திற்கு அமைவாகத் தனது கட்சிக்காரரை குற்றவாளியாக அடையாளம் காண முடியாது என்று மன்றில் எடுத்தியம்பி அதனால் வெற்றி பெற்றதால்தான்.



சதாசிவம் கொலை வழக்கில் சதாசிவத்தை விடுதலை பெற உதவிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா அதற்கடுத்து வந்த தேர்தலில் தோற்றார். முன்னர் அவருக்கு எப்பொழுதும் ஆதரவு அளித்து வந்த வெள்ளவத்தைத் தமிழர்கள் அம்முறை கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவுக்கு வாக்களிக்கவில்லை. அவர் மேல் அவ்வளவு ஆத்திரம்.

அண்மையில் இதுவரை காலமும் பல கட்சியினரையும் ஒன்று சேர்க்க உதவி புரிந்தவர் சட்டத்தரணி சிறிகாந்தா அவர்களே.

மேலும் மாவை போன்ற ஒரு முக்கிய கட்சியின் தலைவர் கூட்டுக்கும் தலைமை வகித்தால் சிறிய கட்சிகள் வலு இழந்துவிடுவன. முக்கிய கட்சியின் கையே ஓங்கும். அதன் செல்வாக்கே செல்லுபடியாகும். ஆனால் சிறிய கட்சியின் தலைவர்கள் கூட்டுக்குத் தலைமை வகித்தால் பெரிய கட்சிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. சிறிய கட்சிகளும் அடையாளம் பெறுவன. மாவை எனது பல



வருடகால நண்பர். அவரை விடுத்து சிறியை நான் சிபார்சு செய்வது நீண்டகால ஒற்றுமை கருதியும் மக்களின் நலன்கருதியும். சம்பந்தன் அவர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்ததையும் எவ்வாறு சிறு கட்சிகள் அவரால் புறக்கணிக்கப்பட்டன என்பது பற்றியும் யாவரும் அறிவர்.

### கொள்கைகள்

அடுத்து கொள்கைகள் எனும் போது சில அடிப்படை விடயங்கள் கட்சித் தலைவர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தேசியம் என்பது வெறும் பேசு பொருள் அல்ல. 1987ஆம் ஆண்டின் இந்திய – இலங்கை உடன்பாட்டில் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பாரம்பரிய தமிழர் வாழ் இடங்கள் என்றும் அவர்களின் தாயகம் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு மாறாகக் கருத்துக்களை நாம் வெளியிடுவது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து விலகுவதாக அமையும். ஆகவே வடக்கு, கிழக்கு இணைப்பும் அம் மாகாணங்கள் இரண்டும் பாரம்பரியமாகத் தமிழ் மொழி பேசும் மாகாணங்கள் என்பதும் எல்லாக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேலும் அம் மாகாண மக்கள் கூட்டாகச் சர்வதேசச் சட்டப்படி தன்னாட்சிக்கு உரித்துடையவர்கள் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ஒற்றையாட்சியின் கீழ் எமது தன்னாட்சி சாத்தியமற்றது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒற்றையாட்சி வேறு ஒன்றிணைந்து ஐக்கியப்படுவதால் ஏற்படும் ஆட்சி வேறு என்பதன் அர்த்தத்தையும் புரிந்து நாம் செயலாற்ற வேண்டும். இவற்றையெல்லாம் பத்துக் கட்சிகளும் புரிந்து கொண்டு ஏற்று நடக்க உடன்பட்டால்த்தான் கூட்டுக்கட்சி உருவாகலாம்.

### நிறுவனமயப்படுத்தல்

மூன்றாவது நிறுவனமயப்படுத்தல் பற்றியது. எல்லோரும் தலைமைத்துவத்தைத் தாமே ஏற்றுக் கொள்ள முடியாது. ஆகவே ஒரு தக்க தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு ஒன்றிணைந்த கூட்டை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதைக் கட்சித் தலைவர்கள் பேசி முடிவெடுக்க வேண்டும். ஐந்து கட்சிகள் சேர்ந்து எழுத்து மூல உடன்பாட்டின் அடிப்படையில்தான் எமது தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி பயணிக்கின்றது. அதைப்போல் ஒவ்வொரு கட்சியும் தனது தனிமைத்துவத்தைப் பேணும் அதே நேரம் உடன்படிக்கையின் அடிப்படையில் எவ்வாறு நிறுவன ரீதியாகப் பயணிக்கலாம் என்பதைக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கலாம்.



ஆகவே உங்கள் கேள்விக்குப் பதில் – குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக பத்துக் கட்சிகள் இடையே ஒரே கருத்து எழுந்ததெனில் அது சம்பந்தமாக ஒருங்கிணைந்து அப்போதைக்குப் பயணிக்க முடியும். அதற்கு அப்பால் செல்வதாயின் பல விட்டுக் கொடுப்புக்கள் அவசியம். எமது மக்களின் நலன் கருதி நாம் விட்டுக் கொடுப்புக்களுக்கு சம்மதம் தெரிவிக்க வேண்டி வரும். அடுத்த தேர்தலில் வெல்வது ஒன்றே குறிக்கோளாக இருப்பின் ஒற்றுமை சிதைபட்டு விடும், சீர் குலைந்து விடும். ஆகவேதான் நாம் விட்டுக் கொடுக்க முன்வர வேண்டும். கொள்கைகளுக்காக ஒன்று சேர சம்மதம் தெரிவிக்க வேண்டும். மக்களின் விடிவு ஒன்றே எமது தாரக மந்திரமாக அமையின் ஒற்றுமை கட்டாயம் ஏற்படும். தம்மை விடக் கெட்டிக்காரர் இவ்வுலகத்தில் யாருமில்லை என்று சிந்திப்பவர்கள் இவ்வாறான ஒற்றுமையை வளரவிடமாட்டார்கள். தாம் கூறுவதை மற்றவர்கள் முழுமையாக ஏற்க வேண்டும் என்றே எதிர்பார்ப்பார்கள். அவர்களுடன் எவ்வாறு கூட்டுச் சேரலாம் என்பதைப் பேசியே நாம் முடிவுக்கு வரமுடியும். – என்று உள்ளது.

## யாழில் முடக்கல் நிலை நீக்கப்பட்டாலும்

# மக்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றுவது மிகவும் அவசியம்

### மாவட்ட அரச அதிபர் மகேசன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.12

முடக்க நிலை நீக்கப்பட்டாலும் அப்பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவது அவசியமானது.

– இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபரும் மாவட்ட கொரோனா ஒழிப்பு செயலணியின் தலைவருமான க.மகேசன் தெரிவித்தார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மூன்று கிராமங்கள் (இராஜகிராமம், குருநகர் மற்றும் திருநகர்) தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் கொரோனா அச்சம் காரணமாக முடக்கப்பட்டிருந்த மூன்று கிராமங்கள் நேற்று காலையிலிருந்து (புதன்) முடக்கல் நிலையில் இருந்து விடு விக்கப்பட்டுள்ளன. எனினும், குறித்த பகுதி மக்கள் சுகா தார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடை வெளியைக் கடைப்பிடித்துத் தமது அன்றாட செயற் பாடுகளை முன்னெடுத்தல் அவசியமாகும்.

மேல் மாகாணம் மற்றும் ஏனைய மாவட்டங்களில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் காணப்படுகின்றது. அந்தநிலையில் தற்போது யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவும் அச்சம்



காரணமாக சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்ட பிர தேசங்கள் முடக்க நிலைலிருந்து விடுவிக்கப்பட்டாலும் தொற்று அச்சம் தொடர்ந்து காணப்படுகின்றது.

எனவே, அப்பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியான முறையில் பின்பற்றுவதன் மூலமே அப்பகுதியிலோ அல்லது வேறு பகுதிகளில் குறித்த தொற்று ஏற்படாதவாறு பாதுகாக்க முடியும்.

அத்துடன் முடக்க நிலையிலிருந்து விடுபட்ட கிராமங்களுக்கு மேல் மாகாணம் அல்லது ஏற்கனவே கொரோனா பாதிப்புள்ள அபாய வலயங்களிலிருந்து புதியவர்கள் யாரும் வந்தால் அவர்கள் கட்டாயமாக சுகாதாரப் பிரிவினரிடம் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் – என்றார்.

## இரத்தினபுரி மாவட்டத்தில் சதமடித்தது 'கொரோனா'

இரத்தினபுரி மாவட்டத்தின் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது என மாவட்ட அரச அதிபர் மாலனீ லொகு போதாகம இன்று தெரிவித்தார்.

கடந்த ஞாயிறன்று வரை 91 ஆகக் காணப்பட்ட கொரோனா நோயாளர் களின் எண்ணிக்கை நேற்று திடீரென 9 ஆல் அதிகரித்துள்ளது எனவும் அவர் கூறினார்.

இவ்விடயம் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொற்றாளர்கள் அனைவரும் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 5 கொரோனா சிகிச்சை நிலையங்களில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. 1,668 குடும்பங்களைசேர்ந்த 5 ஆயி ரத்து 316 பேர் தனிமைப்படுத்த லுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் மினுவாங் கொடை பிரண்டிக்ஸ், கொழும்புத்துறை முகம், பேலியகொட மீன் சந்தை என 8 குழுக்களாக வகுக்கப்பட்டு வெவ்வேறாகத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் – என்றார்.

## விவசாயி வயலில் விழுந்து மரணம்

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட விசுவமடு இளங்கோபுரத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த – 41வயதுடைய – மாரிமுத்து சுதாகரன் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுக் காலை வயலில் வரம்பு வெட்டிக்கொண்டிருந்த வேளை இவர் வயலில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என இவரது உறவினர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சம்பவம் குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணை நடத்தியுள்ளமையுடன் பிரேத பரிசோதனைக்காக சடலம் மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

## இந்தியாவில் சிக்கித் தவித்த 66 இலங்கையர் திரும்பினர்

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக இந்தியாவில் சிக்கியிருந்த 66 இலங்கையர்கள் நேற்று (புதன்கிழமை) காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்குச் சொந்தமான விசேட விமானத்தின் ஊடாக அவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனைத்தொடர்ந்து, அவர்கள் அனைவரையும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மாவட்ட ஒருங்கிணைப்புக் காரியாலயம் மட்டக்களப்பில் பிள்ளையானால் திறப்பு!



மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் காரியாலம் மாவட்ட செயலகத்தில் நேற்று (புதன்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடு தலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிலையில் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வரும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுகூட்டத்தில் பங்கேற்பதற்காக நீதிமன்ற அனுமதியைக் கோரியிருந்த நிலையில் அதற்கான அனு மதி நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது

இதனையடுத்து நேற்றையதினம் மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருக்கான காரியாலம் உத்தியோகபூர் வமாகத் திறக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சந்திரகாந்தன் அதிதியாகக் கலந்து கொண்டார். சமய கிரிகைகளுடன் காரியாலம் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர் கண பதிப்பிள்ளை கருணாகரன், உதவி அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## 401 இலங்கையர் நாடு திரும்பினர்!

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 401 இலங்கையர்கள் மூன்று விமானங்களில் நாட்டை வந்தடைந்துள்ளனர். அதன்படி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 50 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

மேலும் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு வேலை வாய்ப்புக்காகச் சென்ற 275 இலங்கையர்கள் நேற்று அதிகாலை 5.40 மணியளவில் நாட்டை வந்தடைந்தனர்.

மேலும் ஐ.நா. அமைதி காக்கும் படைகளில் பணியாற்றுவதற்காக பல்வேறு ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்ற 76 இலங்கை இராணுவ வீரர்களும் எத்தியோப்பிய ஏயர்லைன்ஸ் மூலமாக அதிகாலை நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அவர்களை தனிமைப் படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அரச கொள்கையின் அடிப்படையில் கொரோனாவை கையாள வேண்டும்

### இப்படிக் கூறுகின்றார் பிள்ளையான்

உலகளாவியரீதியில் சவாலாக இருக்கின்ற கொரோனா மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் வந்திருக்கின்றது. இதனை அரச கொள்கையின் அடிப்படையில் கையாண்டு சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய விடயங்களையும் எப்படி முன்னெடுப்பது என்ற பொதுவான கொள்கைத் திட்டத்துக்கு உழைக்க வேண்டும்.

– இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கான காரியாலயத்தை மாவட்ட செயலகத்தில் நேற்று சி.சந்திரகாந்தன் திறந்துவைத்து கடமைகளைப் பெறுப்பேற்ற பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளேன். இந்த



இடத்துக்கு வருவதற்கு பெரும் பங்காற்றிய எனது மக்களுக்கு நன்றி. தேர்தல் காலங்களில் மக்களிடம் அபிவிருத்தி செய்து தருவாக வாக்குறுதியளித்துத் தான் இந்த இடத்துக்கு வந்திருக்கின்றோம்.

தற்போது உலகளாவிய ரீதியில் சவாலாக இருக்கின்ற கொரோனா மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் வந்திருக்கின்றது. இந்த விடயங்களை அரச கொள்கையின் அடிப்படையில் கையாண்டு சாதாரண மக்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் அவர்களுடைய உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய விடயங்களையும் எப்படி முன்னெடுப்பது என்ற பொதுவான கொள்கைத் திட்டத்துக்கு உழைக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு.

அந்த அடிப்படையில் கொரோனாத் தொற்றைத் தடுத்து மக்களைப் பாது காத்துக்கொண்டு அதனோடு எங்களுடைய கிராமிய பொருளாதாரத்தை வளர்தெடுப்பது எங்கள் நோக்கம். அந்தத் திட்டத்துக்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றேன்.

நீண்ட காலமாக நான் நிர்வாகத்துடன் தொடர்பு இல்லாத காரணத்தால் நேற்று கடமைகளைப் பெறுப்பேற்றவுடன் நிலைமைகளை அவதானித்துக் கொண்டு இன்று பெரும் விமர்சனத்தின் மத்தியில் மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தை நடத்தவுள்ளோம்.

காலைக்கதிர்
Kalaikkathir



ந.லோகதயாளன்



# இலங்கை – இந்தியா இடையில் படகு அரசியலால் பெரும் சர்ச்சை

வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டிய விவகாரம் நீண்டகாலமாக இழுபடுகையில், அதற்கிடையில் –

இந்திய மீனவர்களால் இலங்கையில் கைவிடப்பட்ட படகுகள் விவகாரத்தைப் பயன்படுத்தி இங்கும்



01. (2020.03.11)

2020.03.11

= 03

= 02

= 02

| Registerd Number | Lenght | Breadth | Hull | Engine | Condition |
|---|---|---|---|---|---|
| 1. IND/TN/06/MO/2030 | 33' 01" | 7' 09" | Fiberglass | Available | good |
| 2. IND/TN/06/MO/1632 | 28' 07" | 6' 10" | Fiberglass | Available | good |
| 3. IND/TN/06/MO/1199 | - | - | Fiberglass | N/A | Totally destroy |

அங்கும் சிலர் ஆதாயம் காண முயன்றனரா என்ற பெரும் கேள்வி தற்போது சர்ச்சையாக உருவெடுத்துள்ளதோடு, அந்த சர்ச்சை இரு நாட்டின் அரசுகளுக்கும் தலையை குடையும் அளவிற்கு இட்டுச் சென்றுள்ளது.

இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடும் சமயம் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்து இலங்கை வளத்தை அபகரிப்பதனால் உள்ளூர் மீனவர்கள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்குவது தற்போது ஒரு தசாப்தமாகவே சுட்டிக்காட்டப்படுகின்றது. இருப்பினும் அந்தச் சிக்கலுக்கு இன்று வரை ஒரு நிரந்தரத் தீர்வு எட்ட முடியாமலேயே உள்ளது.

இந்த நிலையில் இலங்கைக் கடற்பரப்பிற்குள் 2015 ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை ஊடுருவிய குற்றத்திற்காகத் தடுக்கப்பட்ட இந்திய மீன் பிடி படகுகளை விடுவிக்குமாறு இலங்கை சட்டமா அதிபர் திணைக்களம் 2019ஆம் ஆண்டு வழங்கிய பரிந்துரையின் பெயரில் நீதிமன்றங்கள் அப்படகுகளை விடுவிக்க அனுமதியும் வழங்கின. அந்த அனுமதியின் பெயரில் இந்தியாவில் இருந்து இந்திய கடல்வள அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் நேரில் வந்து தமது படகுகளைப் பார்வையிட்டனர். பார்வையிட்டதன் அடிப்படையில் நல்ல நிலையில் இருந்த படகுகளை இந்தியாவிற்கு எடுத்துச் சென்றமையோடு பழுதடைந்த படகுகளைக் கைவிட்டுச் சென்றனர்.

இவ்வாறு கைவிட்ட படகுகள் கிராஞ்சி, காரை நகர் கடற்கரை பகுதிகளில் உள்ள கடற்படை முகாம் அருகே கட்டி வைக்கப்பட்டுள்ளன. இங்கே நிறுத்தி வைத்திருக்கும் இந்த படகுகளினால் நுளம்பு பெருக்கம் ஏற்படுவதோடு சுற்றுச் சூழலிற்கு மாசு ஏற்படுவதாகக் கருதி இவற்றினை அங்கிருந்து அகற்ற அனுமதி கோரப்பட்டது . இதன் அடிப்படையில் 2020.08.27 அன்று இடம்பெற்ற சட்டவிரோத கடல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் செயலணிக் கூட்ட தீர்மானத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றங்களிற்கு நகர்த்தல் பத்திரத்தைச் சமர்ப்பித்தனர்.

நீதிமன்றங்களில் சமர்ப்பித்த வழக்குகளில், ஊர்காவற்றுறை மன்றில் 2020.09.08 அன்று வழங்கிய கடித்ததிற்கான கட்டளைப் பிரதி, B/216/17 இலக்க நகர்த்தல் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. இந்த நகர்த்தல் பத்திரத்தில் இந்தியத் தூதரகத்தின் கோரிக்கைக்கு அமையவும், சட்டமா அதிபர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரது ஆலோசனையின் பெயரிலும் 94 படகுகளையும் ஏலத்தில் விட அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்த அனுமதி கோரலின் பெயரில் 2020.10.14 அன்று ஊர்காவற்றுறை நீதிமன்றம் வழங்கிய கட்டளையில் படகுகளை ஏலம் விடுவதற்கு அனுமதி வழங்கப்படுள்ளது. இதேபோன்று நவம்பர் மாதம் மன்னார் நீதிமன்றில் 27 படகுகளிற்கு ஏலம் விடுவதற்கு அல்லது அழிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இந்த விடயமே யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு ஊடகங்களில் வெளிவந்த நிலையில் இந்திய



ஊடகங்களும் அவற்றைப் பகிரங்கப்படுத்த பெரும் சர்ச்சை உருவாகியுள்ளது. அதில் இந்திய மீனவர்களின் 121 படகுகள் இலங்கையில் அழிக்கப்படவுள்ளன என தமிழ் நாட்டில் செய்திகள் பரவியமையோடு பல மீனவ அமைப்புக்களின் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் அந்நடவடிக்கைகளைக் கண்டித்துக் கருத்துரைத்தனர்.

இதில் வேடிக்கை என்ன வென்றால் மீனவர்களின் படகுகள் அழிக்கப்படவுள்ளன என்று இப்படிக் கருத்து தெரிவித்துக் கண்டித்த பல இந்திய மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள், இலங்கைக்கு 2019ஆம் ஆண்டு நேரில் வருகை தந்து, இந்தப் படகுகளை பார்வையிட்டு அவற்றைக் கொண்டுசெல்ல முடியாது எனக் கைவிட்டுத் திரும்பிச் சென்ற குழுவிலும் அங்கம் வகித்தனர்.

இதேநேரம் படகுகளை ஏலம் விடுவதற்கு அனுமதி கோரி திணைக்களம் நீதிமன்றில் சமர்ப்பித்த ஆவணத்தை ஆராய்ந்தபோது, இந்தியத் தூதரகத்தின் கோரிக்கையின் பெயரிலும் அந்த விண்ணப்பம் செய்யப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு இந்தியத் தூதரகம் வெளிவிவகார அமைச்சிற்கு வழங்கிய கடிதமும் இணைக்கப்பட்டிருந்தது. அதனால் இந்தியத் தூதரகம் இவ்விடயத்தை ஏற்கனவே நன்கு அறிந்திருந்த தோடு அதன் நிலைவரத்தையும் சரியாகவே அணுகியுள்ளதாகவே கருதப்படுகின்றது.



| Registerd Number | Lenght | Breadth | Hull | Engine | Present Condition |
|---|---|---|---|---|---|
| **1. IND/TN/06/MM/519** | **48' 00"** | **16' 06"** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 2. IND/TN/10/MM/074 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **3. IND/TN/06/MM/923** | **48' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 4. IND/TN/08/MM/331 | 48' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 5. IND/TN/11/MM/169 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 6. IND/TN/10/MM/94 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 7. IND/TN/10/MM/792 | | | | | |
| 8. IND/TN/08/MM/233 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 9. IND/TN/08/MM/317 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 10. IND/TN/10/MM/263 | N/A | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **11. IND/TN/06/MM/569** | **49' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 12. IND/TN/06/MM/491 | 48' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 13. IND/TN/08/MM/213 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 14. IND/TN/08/MM/80 | 39' 00" | 12' 00" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 15. IND/TN/08/MM/373 | 39' 00" | 12' 00" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 16. IND/TN/08/MM/279 | | | | | |
| 17. IND/TN/10/MM/498 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 18. IND/TN/08/MM/1419 | 39' 00" | 12' 00" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 19. IND/TN/10/MM/359 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 20. IND/TN/06/MM/287 | 30' 00" | 09' 06" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 21. IND/TN/08/MM/104 | 34' 00" | 12' 00" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 22. IND/TN/10/MM/129 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 23. IND/TN/08/MM/003 | 34' 00" | 11' 06" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 24. IND/TN/10/MM/832 | 38' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 25. IND/TN/10/MM/1038 | 31' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 26. IND/TN/08/MM/1302 | 38' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 27. IND/TN/08/MM/046 | 49' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 28. IND/TN/10/MM/441 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 29. IND/TN/10/MM/331 | 41' 00" | 13' 02" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 30. IND/TN/08/MM/058 | 41' 00" | 13' 02" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 31. IND/TN/08/MM/146 | 41' 00" | 13' 02" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 32. IND/TN/T/810 | | | | | |
| 33. IND/TN/10/MM/390 | 49' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 34. IND/TN/08/MM/302 | 31' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 35. IND/TN/06/MM/385 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 36. IND/TN/06/MM/758 | 49' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **37. IND/TN/06/MM/27** | **49' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 38. IND/TN/08/MM/20 | 38' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 39. IND/TN/10/MM/456 | 49' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 40. IND/TN/10/MM/443 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 41. IND/TN/06/MM/437 | 40' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 42. IND/TN/08/MM/296 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 43. IND/TN/10/MFB/780 | 55' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **44. IND/TN/06/MM/633** | **49' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 45. IND/TN/08/MM/136 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 46. IND/TN/11/MM/734 | 34' 00" | 12' 00" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 47. IND/TN/08/MM/87 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 48. IND/TN/10/MM/554 | 38' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 49. IND/TN/08/MM/127 | 38' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 50. IND/TN/08/MM/194 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 51. IND/TN/06/MM/902 | 38' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 52. IND/TN/11/MM/346 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 53. IND/TN/11/MM/277 | | | | | |
| 54. IND/TN/09/MO/381 | 30' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 55. IND/TN/08/MM/101 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 56. IND/TN/08/MM/100 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 57. IND/TN/06/MM/426 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 58. IND/TN/11/MM/144 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 59. IND/TN/08/MM/209 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 60. IND/TN/11/MM/807 | 30' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 61. IND/TN/08/MM/049 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 62. IND/TN/06/MM/318 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 63. IND/TN/08/MM/168 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 64. IND/TN/10/MM/728 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 65. IND/TN/08/MM/387 | 30' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 66. IND/TN/08/MM/199 | 30' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 67. IND/TN/08/MM/82 | 30' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 68. IND/TN/10/MM/262 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 69. IND/TN/10/MM/438 | 30' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 70. IND/TN/10/MM/455 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 71. IND/TN/11/MM/117 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 72. IND/TN/10/MM/486 | 49' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **73. IND/TN/06/MM/118** | **40' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 74. IND/TN/08/MM/1813 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 75. IND/TN/06/MM/329 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 76. IND/TN/11/MM/805 | 30' 00" | 09' 06" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 77. IND/TN/08/MM/295 | 30' 00" | 09' 06" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 78. IND/TN/06/MM/5380 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 79. IND/TN/06/MM/478 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 80. IND/TN/11/MM/53 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 81. IND/TN/10/MM/075 | | | | | |
| **82. IND/TN/06/MM/132** | **41' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 83. IND/TN/06/MM/365 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 84. IND/TN/09/MM/002 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 85. IND/TN/08/MM/268 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 86. IND/TN/10/MM/762 | | | | | |
| 87. IND/TN/11/MM/118 | 39' 00" | 12' 06" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 88. IND/TN/10/MM/277 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 89. IND/TN/10/MM/213 | 30' 00" | 09' 06" | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 90. IND/TN/06/MM/791 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 91. IND/TN/06/MM/428 | 34' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 92. IND/TN/06/MM/266 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **93. IND/TN/06/MM/1101** | **49' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| **94. IND/TN/06/MM/494** | **49' 00"** | **N/A** | **Steel** | **Sunk** | **H/Sunk (Grounded)** |
| 95. IND/TN/MM/605 | | | | Sunk | H/Sunk (Grounded) |
| 96. IND/TN/08/MM/264 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| 97. IND/TN/09/MM/177 | 39' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |
| **98. IND/TN/06/MFM/054** | | | **Steel** | **Sunk** | **Sunk (Grounded)** |
| 99. IND/TN/10/MM/342 | | | Wood | Sunk | Sunk (Grounded) |
| 100. IND/TN/10/MM/273 | 41' 00" | N/A | Wood | Sunk | H/Sunk (Grounded) |

# விசேட சமூக அபிவிருத்தி திட்டத்துக்கான இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்து





இந்திய நிதியுதவியின் கீழ் இலங்கை மதிப்பில் 60 கோடி ரூபாவுக்கும் அதிகமான செலவில் இலங்கையில் செயற்படுத்தப்படும் சமூக அபிவிருத்தி திட்டத்துக்காக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நேற்றுமுன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தமானது 2005 ஆம் ஆண்டு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக சேவையாற்றிய காலப்பகுதியில் கைச்சாத்திடப்பட்டது என்பதுடன் அது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை நீடிக்கப்பட்டு கையெழுத்தாகின்றது.

இந்நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவின் பங்கேற்புடன் விஜேராமவிலுள்ள பிரதமரின் இல்லத்தில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்திற்கு அமைவாக விசேட அபிவிருத்தித் திட்டத்துக்கான செலவு 30 கோடி ரூபாவுக்கு அதிகமாவதுடன் அவசரகால அம்புலன்ஸ் சேவை, வீடமைப்புத் திட்டம், புதிய யாழ். கலாசார மத்திய நிலைய செயற்பாடுகள் என்பன இதனூடாகச் செயற்படுத்தப்பட உள்ளன.

சிறு அபிவிருத்தி திட்டத்திற்காக அதிகபட்சமாக 30 கோடி ரூபா செலவிடப்படுவதுடன், மீள் குடியேற்றம், தங்குமிடம், வாழ்வாதாரம், வேலைவாய்ப்பு, பெண்களுக்கு அதிகாரமளிக்கும் தொழிற்பயிற்சி, கல்வி மற்றும் ஆராய்ச்சி, கலாசார நடவடிக்கை, விளையாட்டு, தொழிற்துறை மேம்பாடு, மருத்துவ நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வைத்திய உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல் என்பனவும் இதன் கீழ் செயற்படுத்தப்படவுள்ளன.

தற்போது செயற்பாட்டிலுள்ள இந்தத் திட்டம் புதிய ஒப்பந்தத்துக்கமைய தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டின் மிகப் பெரிய கப்பலை டொக்யார்ட் உருவாக்கியுள்ளது!

நாட்டின் மிகப் பெரிய கப்பலை கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் தயாரித்துள்ளது.

ஜப்பானின் ஒனோமிச்சி நிறுவனத்துடன் இணைந்து இதற்கான நடவடிக்கையை கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

நிறுவனத்தின் 51 சதவீத பங்களிப்பு ஜப்பானுக்கும் 35 சதவீதப் பங்களிப்பு இலங்கையின் அரச நிறுவனமொன்றுக்கும் உரித்தாகும்.

113 .1 மீற்றர் நீளமான இந்தக் கப்பலின் அகலம் 21. 5 மீற்றர்களும், ஆழம் 8 . 8 மீற்றர்களும் ஆகும். மணிக்கு 14 . 5 மைல் வேகத்தில் இந்தக் கப்பலால் பயணிக்க முடியும்.

முழுமையாக உள்நாட்டு பொறியியலாளர்களின் பங்களிப்புடன் இந்தக் கப்பல் 21 மாதங்களில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அடிப்படை வசதியற்ற குடும்பத்துக்கு வலி.வடக்கு தவிசாளரால் மின்சாரம்!



அளவெட்டி கும்பளாவளை வட்டாரத்தில் மிகவும் வறுமைநிலையிலும் அடிப்படை வசதிகளின்றியும் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு - அவர்களின் குடிசை வீட்டுக்கு - வலி.வடக்கு பிரதேசசபையின் தவிசாளரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதி செயலாளருமான சோமசுந்தரம் சுகிர்தனால் தனது சொந்த நிதியில் 23 ஆயிரம் ரூபா செலவில் மின்சாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

வலி.வடக்கு பிரதேசசபையில் அளவெட்டி கும்பளாவளை வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் லயன் செ.விஜயராஜின் கோரிக்கைக்கு அமையவே தவிசாளரால் இந்த மின்சாரம் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சியில் விபசார விடுதியும் கருக்கலைப்பு நிலையமும் முற்றுகை

யாழ்.தென்மராட்சி கரம்பகம் - பாடசாலை வீதியில் இயங்கிவந்த விபசார விடுதியும், அதனோடு இணைந்து இயங்கிய கருக்கலைப்பு நிலையமும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளன.

கொடிகாமம் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு (செவ்வாய்க்கிழமை) மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்த விபசார விடுதியும், கருக்கலைப்பு நிலையமும் முற்றுகையிடப்பட்டுள்ளன.

இதன்போது விபசாரத்தில் ஈடுபட்டு வந்த இரு பெண்கள் மற்றும் விடுதி உரிமையாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளமையோடு, கருக்கலைப்பு சாதனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

விசுவமடு மற்றும் நல்லூர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பெண்களே விபசாரத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகன்றது.

மேலும், இந்த நிலையத்துக்கு மருந்துப் பொருள்களை வழங்கிய மந்திகை வைத்தியசாலை ஊழியர் ஒருவர் நேற்றிரவு கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கைதான மூவரும் இன்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

## அரச ஊழியர்கள் உள்நாட்டு ஆடையை அடுத்த வருடம் முதல் அணியவேண்டும்

கொழும்பு, நவ.12

அடுத்த வருடம் முதல் அரச ஊழியர்கள் பத்திக் அல்லது கைத்தறி நெசவுத்துணிகளால் தைக்கப்பட்ட ஆடையை அணிய வேண்டும் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதற்குரிய வேலைத்திட்டம் பொது நிர்வாக அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படும் எனவும் இலங்கையின் புடைவை உற்பத்திக் கைத்தொழிலில் நிலவும் பிரச்சினைகளக்குத் தீர்வு கண்டு, நாடெங்கிலும் உள்ள ஆடை வடிவமைப்புக் கலைஞர்களின் துணையுடன் புதிய ஸ்டைல்களை அறிமுகம் செய்யப் போவதாக அவர் கூறினார்.

எதிர்காலத்தில், பத்திக் ஆடை வடிவமைப்பாளர்களை பயிற்றுவித்து, அவர் களுக்கு என்-வி-கியூ சான்றிதழ்களை வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். துறை சார்ந்தவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படவுள்ளன எனவும் அமைச்சர் தயாசிறி ஜயசேகர மேலும் குறிப்பிட்டுள்ளர்.

# வைரஸ் கட்டுப்பட்டதால் ஊரடங்கு தளர்த்தவில்லை!

## அரச மருத்துவர் சங்கம்

கொரோனா வைரஸ் விடயம் தொடர்பாக இலங்கை மக்கள் தொடர்ந்தும் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் சில பகுதிகளில் தளர்த்தப்பட்டுள்ளதையடுத்து, வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் பாதிப்புக்கள் குறைவு என்று பொது மக்கள் மத்தியில் அநாவசிய நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பேணாமல் செயற்படுகின்றமையை அவதானிக்க முடிவதாகவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை கொத்தணி உருவானதன் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக உயர்வடைந்ததைப் போன்று குறுகிய காலத்தில் அதிகளவான மரணங்களும் பதிவாகியுள்ளன.

இவ்வாறு பதிவாகிய மரணங்களில் 50 சதவீதமானோர் வீடுகளிலேயே உயிரிழந்துள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தற்போதுள்ள அபாயமான நிலைமையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் வெள்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு இந்த தொற்று ஏற்பட்டால் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு. தொடர்ச்சியாக பதிவாகியுள்ள மரணங்கள் தொடர்பாகவும் ஆராய விசேட குழுவொன்றை நியமிக்கத் தாங்கள் பரிந்துரை செய்துள்ளனர் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, விரைவில் இந்த மரணங்கள் பற்றி பகுப்பாய்வு செய்யப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் மாத்திரமின்றி ஏனைய பகுதிகளில் உள்ள மக்களும் அவதானமாகவே அன்றாட செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெனிங் சந்தை மாறுகிறது பேலியகொடை பகுதிக்கு!

மெனிங் சந்தையை கொழும்புக்கு வெளியில் அதாவது தற்காலிகமாக பேலியகொடைக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.வார இறுதியில் அல்லது அடுத்தவார முதற் பகுதியில், இதற்கான பணிகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## இளம் கைதி திடீர் மரணம்

அங்குனகொலபெலஸ்ச சிறைச்சாலையில் கைதியொருவர் திடீர் உடல் நலக்குறை வினால் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் எனச் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள் ளனர். இவ்வாறு உயிரிழந்தவர் சிலாபத்தைச் சேர்ந்த 28 வயதுடையவர் ஆவார்.

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டின் கீழ் அவர் சிறைத்தண்டனை அனுபவித்து வந்தார் எனவும், உயிரிழந்தவரின் சடலம் அங்குனகொலபெலஸ்ச மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir

## விரிவடையும் ஊடகக் கொத்தணி

# பிரபல வானொலி சேவையில் நால்வருக்குத் தொற்று உறுதி

## இருவர் தமிழ் அறிவிப்பாளர்கள்

கொழும்பு,நவம்பர்.11

இலங்கையின் பிரபல தனியார் தமிழ் வானொலியான அறிவிப்பாளர்கள் இருவர் உட்பட அங்கு பணியாற்றும் நால்வருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்நிறுவனத்தின் தமிழ், சிங்கள வானொலிக் குழுமங்களில் பணியாற் றும் அறுபது பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நால்வரும் ஆண்கள் எனவும், அவர் களில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும், மற்றையவர் யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது. இந்த இருவரில் ஒருவர் கொழும்பிலும் மற்றையவர் தெஹிவளையிலும் தற்காலிகமாகத் தங்கிப் பணியாற்றி வருகின்றார்கள்.

இதேவேளை, அந்த நிறுவனத்தின் நூலகம் அல்லது ஆவணக் காப்பகத்தில் பணியாற்றும் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்கள் இருவரும் சிங்களவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை, தமிழ், சிங்கள ஊடகங்களைச் சேர்ந்த நாடாளுமன்றச் செய்தியாளர்கள் ஐவருக்கு ஏற்கனவே கொரோ னாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேலும் மூன்று பேர் உயிரிழப்பு: கொரோனா சாவு 44 ஆக உயர்வு

கொழும்பு, நவ.11

இலங்கையில் கொரோனாத் தொற்றால் இன்றும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதையடுத்து கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 44 ஆக அதிகரித்துள்ளது.

கொழும்பு 11 ஐச் சேர்ந்த 40 வயது ஆண் ஒருவரும், களனிப் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் இன்று உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, பொலிஸ் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த பாணந்துறையைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். அவர் கொரோனாத் தொற்றுக் காரணமாக ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## பெருந்தொகை கேரளக் கஞ்சாவுடன் மன்னாரில் இளைஞர் ஒருவர் கைது!



*மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, துருக்கி சிட்டிப் பகுதியில் சுமார் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.*

*மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவல் அடிப்படையில் மன்னார் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட துருக்கி சிட்டி பகுதிக்குச் சென்ற பொலிஸார் 7 கிலோ 815 கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகளுடன் 29 வயது இளைஞரைக் கைதுசெய்துள் ளனர்.*

*இந்தச் சம்பவம் செவ்வாய் மாலை இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.*

## கொரோனா வைரஸிலிருந்து 10 ஆயிரம் பேர் குணமடைவு!

கொழும்பு, நவ.11

இலங்கையில் இன்று இதுவரையான காலப்பகுதியில் 646 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி நாட்டில் கொரோனாத்தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்து 183 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் 14 ஆயிரம் 716 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 4 ஆயிரம் 489 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். 44 பேர் உயிரிழந்துள்ளனர்.

## கொழும்பில் 30 ஆயிரம் பேருக்கு கொரோனா தொற்றும் அபாயம்!

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எண்ணிக்கை 30 ஆயிரமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என கொழும்பு மாநகர சபை பிரதான சுகாதார மருத்துவர் ருவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

எழுமாற்றாக இன்று மேற்கொள்ளப்பட்ட 400 பி.சி.ஆர். பரிசோதனைகளில் 19 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனடிப்படையில் நூற்றுக்கு 5 வீதமான தொற்றாளர்கள் இனங்காணப் படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் 30 ஆயிரம் பேர் வரையில் வைரஸ் தொற்றுடன் இருக்கலாம். எனினும், இந்தத் தொற்றாளர்களிடமிருந்து தொற்றுப் பரவுகின்றதா? அல்லது உடலிலே உள்ளதா? என்பதைத் தீர்மானிக்க முடியாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பிள்ளையான் பொதுநிகழ்வில் பங்கேற்க முடியும் என்றால்

# அரசியல் கைதிகளை ஏன் விடுதலைசெய்ய முடியாது?

**அரசிடம் சிவாஜி கேள்விக்கணை**



யாழ்ப்பாணம், நவ.11

பிள்ளையான் சிறைச்சாலையிலிருந்துவெளியே அபிவிருத்தி அலுவலகத்தைத் திறக்க முடியுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள்நாடாளுமன்றஉறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படு கொலை சந்தேகத்தில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) இன்று மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு அலுவலகத் திறப்பு விழாவுக்காக சிறைச்சாலையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இந்த நிலைமை ஏன் தமிழ் அரசியல் கைதிகள் மீது காட்டப்படக்கூடாது?

அரசினுடைய ஆள்களுக்கு ஒரு நீதியும் ஏனையவர்களுக்கு ஒரு நீதியுமாக இந்த அரசு செயற்படுகின்றது. எனினும், இவ்வாறான சம்பவங்களை அரசு நிறுத்துவதோடு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் - என்றார். பிள்ளையான் சிறைச்சாலையிலிருந்து வெளியே அபிவிருத்தி அலுவலகத்தைத் திறக்க முடியுமாக இருந்தால் ஏன் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை சந்தேகத்தில் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள் ளையான்) இன்றுமட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு அலுவலகத் திறப்பு விழாவுக்காக சிறைச் சாலையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். இந்தநிலைமைஏன்தமிழ்அரசியல் கைதிகள் மீது காட்டப் படக்கூடாது?

அரசினுடைய ஆள்களுக்கு ஒரு நீதியும் ஏனையவர்களுக்கு ஒரு நீதியுமாக இந்த அரசு செயற்படுகின்றது. எனினும், இவ்வாறான சம்பவங்களை அரசு நிறுத்துவதோடு தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் கூடிய அக்கறை செலுத்த வேண்டும் - என்றார்.

## ஈ.பி.டி.பியின் ஆளுகைக்குட்பட்ட

# வேலணை பிரதேச சபையின் 'பட்ஜட்' இன்று நிறைவேற்றம்

* கூட்டமைப்பு, ஐ.தே.க. எதிர்ப்பு
* உதயசூரியன் ஆதரவு
* முன்னணி நடுநிலைமை



வேலணை, நவ.11

ஈழமக்கள் ஜனநாய கக் கட்சியின் (ஈ.பி.டி.பி) ஆளுகைக் குட்பட்ட யாழ்., வேலணை பிரதேச சபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கால் இன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் வரவு - செலவுத் திட்டத்துக் கான விசேட கூட்டம் இன்று சபையின் தவிசாளர் ந.கருணா கரகுரு மூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 10 உறுப்பினர்களும், எதிராக 9 உறுப்பினர்களும் வாக்களித்த அதேவேளை ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்தார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் 2 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலா ஒரு உறுப்பினர் என 10 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித் தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினர் என 9 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஒருவர் நடுநிலை வகித்தார்.

20 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக 8 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக 6 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி சார்பில் 2 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாக தலா ஓர் உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றனர்.

குறித்த பிரதேச சபையின் 2020, 2019 ஆம் ஆண்டுகளுக்கான வரவு - செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி மாவட்டத்தில் 63 பேருக்கு தொற்று

## 900 குடும்பங்கள் தனிமைப்படுத்தல்

கண்டி மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை 63 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்று கண்டி மாவட்ட அரச அதிபர் சந்தன தென்னக்கோன் இன்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டி மாவட்ட பிரதேச செயலகப் பிரிவில் மட்டும் 20 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போதைய நிலையில் 900 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அனைத்து பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர்கள், அதேபோன்று பொலிஸ், இராணுவம் மற்றும் பிரதேச செயலாளர்கள் இணைந்து குழு வொன்றை அமைத்து கொரோனா வைரஸ் மேலும் பரவாமலிருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் - என்றார்.

# கொரோனாவின் மரணப் பிடியிலிருந்து தமிழ் அரசியல் கைதிகளைப் காப்போம்

## அதற்காக யாவரையும் ஒன்றிணைய அழைப்பு

கொழும்பு, நவ.12

கொரோனாவின் மரணப்பிடியிலிருந்து உடனடியாக தமிழ் அரசியல் கைதிகளை பாதுகாக்க யாவரும் ஒன்றிணைய வேண்டும்.

- இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகளின் நலனைக் கவனிக்கும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பு கோரியுள்ளது. அந்த அமைப்பு சார்பாக அதன் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன்இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

உலகளாவில் கொரோனா வைரஸ் தாக்கம் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. ஐரோப்பிய நாடுகளில் உயிரிழப்புக்கள் மிக மோசமாக காணப்படுகின்றன. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இதன் தாக்கம் இன்னும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. தற்போது இலங்கையில் மூன்றாவது அலை மிக மோசமான விளைவுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. தொடர்ந்து சிறப்புத் தனிமைப் படுத்தல் நிலையங்கள் அதிகரிக்கப்படுகின்றன. இருப்பினும் இந்த தனிமைப்படுத்தல் நிலையங்களில் நோய்த்தொற்று தீவிரத்தால் தனிமைப்படுத்தப்படும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இறப்புகளும் அதிகரித்து வருகின்றன. நோய்த் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்க அரசு பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

நோய்த்தொற்று தீவிரத்தால் பாதிக்கப்பட்டவர்களை தத்தமது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றது. நாளாந்தம் சராசரியாக 500 பேருக்கு மேல் தொற்றாளர்களாக இனம் காணப்படுகின்றனர். மருத்துவ ஆய்வுகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய வைரஸ் மிக வேகமாகவும் மோசமாகவும் பரவி முழு நாட்டையும் அச்சுறுத்தி வருகின்றது. சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களும் கூட மீண்டும் வைரஸ் தாக்கத்திற்கு ஆளாகும் அபாயமும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கொழும்பில் உள்ள சிறைச்சாலைகளில் நோய்த் தொற்று மோசமாக பரவ ஆரம்பித்துள்ளது. எனினும் இந்த சிறைக் கைதிகளின் விடயத்தில் அரசாங்கமும் அதிகாரிகளும் உரிய கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் எதேச்சையாக மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது முதல் நாள் 7கைதிகள் தொற்றுக்கு ஆளாகி இருந்தமை கண்டறியப்பட்டது. அடுத்த நாள் அது 22ஆக அதிகரித்து பின்னர் படிப்படியாக தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து கொண்டிருக்கின்றது. தற்போது சிறைச்சாலைகளில் கொரோனாத் தாக்கம் மிக மோசமாக அதிகரித்து கொண்டிருக்கின்றது என்பது அப்பட்டமான உண்மை.

கொரோனா தாக்கம் ஏற்பட்ட போது சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரைவாசியைக் கூட அங்குப்போது நடைமுறைப் படுத்துவதாகத் தெரியவில்லை. கைதிகளைப் பார்வையிடுதல், நீதிமன்ற நடவடிக்கைகள் என்பன இடைநிறுத்தப்பட்ட பின்பும் இந்த வைரஸ் தொற்று சிறைக்குள் நுழைந்தது என்றால் இதற்கு யார் பொறுப்பாளி என்பதை எவராலும் தேடிப் பார்க்க முடியவில்லை. மாறாக தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்கள் ஏனைய குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டவர் எனத் தினமும் கைது செய்யப்படுவோர் சிறைத்துறையின் கீழ் தடுத்து வைக்கப்படுகின்றனர். இலங்கையில் 12,000 கைதிகளை மட்டுமே தடுக்கக் கூடிய சிறைச்சாலைகளில் 37,000 இக்கும் மேற்பட்ட கைதிகள் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இங்கு எப்படி சமூக இடைவெளி இருக்கப்போகின்றது? இவர்களை பாதுகாப்புடன் எப்படி பராமரிக்க முடியும்?

தற்போது முக்கியமாக நோக்கப்பட வேண்டிய விடயம் யாதெனில் சுமார் 15 - 25 வருடங்களுக்கு மேலாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு நீரிழிவு, மன உளைச்சல், சுவாசக்கோளாறு போன்ற பல தீராத வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதாகும். இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் இன்னொருபுறம் மிக மோசமான உடல், உளப் பாதிப்புக்கும் உள்ளாகி இருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர்கள் போதிய மருத்துவமோ, போசாக்கான உணவோ கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இன்றி உள்ளனர். இவர்களுக்கான நீதிமன்ற நடவடிக்கைகளும் தொடர்ந்து காலதாமதப்பட்டு வருக்கின்றன. இதனாலும் இவர்கள் உடல், உள ரீதியில் மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். தமிழ் அரசியல் கைதிகளில் 10 க்கும் மேற்பட்டோர் சிறைச்சாலைக்குள்ளேயே உயிரிழந்துள்ளனர். சம காலத்தில் தமிழ் அரசியல் கைதிகளைப் பழிவாங்குவதற்கான அனைத்து சாதகமான சூழ்நிலைகளும் கொரோனா மூலமும் ஏற்பட்டு வருகின்றமையையும் சுட்டிக் காட்டத்தான் வேண்டும்.

தற்போது கொழும்பு மாநகர எல்லைக்குள் கொரோனா தாக்கமும் மரணமும் அதிகரித்து வருகின்றன. தமிழ் அரசியல் கைதிகளை தடுத்து வைக்கப்பட்டுள்ள புதிய மகசின் சிறைச்சாலையின் அமைவிடமான பொரளை பிரதேசம் தொற்று அபாய வலயமாக மாறியுள்ளது. இதனால் சிறைச்சாலை மீது சிறப்பு அவதானம் வேண்டும். சிறைச்சாலையில் நோய் கொத்தணி தோற்றம் பெற்று தொற்று நோய் அதிகரித்து வருவதும் தவிர்க்க முடியாது என சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

இதுவரை நோய்த்தொற்று பற்றிப் பேசிக் கொண்டிருந்த நாம் தற்போது மரணம் பற்றி பேசும் நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம். இந்தநிலையினைத் தொடர்ந்து நாம் நான்காவது அலையினை சந்திக்க நேரிடும் எனவும் சுகாதாரப்பிரிவினர் எச்சரிக்கை செய்கின்றனர். தொடர்ந்துவரும் பேரழிவு இன்னும் பாரதூரமாக இருக்கும் என்றும் ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. தற்போது சுகாதார அமைச்சினால் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. பொதுவாக இது இலங்கை நாட்டு மக்களுக்காக இருப்பினும் சிறைக்கைதிகளுக்கு இந்த வழிமுறைகள் எந்தளவு பொருத்தமாக அமையும் என்பது சந்தேகமே.

குறிப்பாக சிறைச்சாலையைப் பொறுத்தமட்டில் எவ்வித சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளையும் பின்பற்றக் கூடியதாக இல்லை. சிறைச்சாலைகள் சமூக இடைவெளி, தொற்று நீக்கல், பரிந்துரைக்கப்பட்ட முகக்கவசம், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடிய செயற்றிட்டம் என எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் அங்கு மேற்கொள்ளப்படுவதாக இல்லை. இவ்வாறு இருக்கும்போது சிறைக்கொத்தணி ஏற்படுவதைத் தடுத்து சிறைகைதிகளை வைரஸ் தொற்றிலிருந்து எப்படி காப்பாற்ற முடியும்? இதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் பின்பற்றப்படுகின்றனவா? இவை எதுவும் இல்லவே இல்லை.

பொதுவாக சிறைக்கைதிகளில் இருந்து தமிழ் அரசியல்கைதிகளை வேறுபடுத்தி வித்தியாசப்படுத்தி சிந்திக்க வேண்டிய அவசியப்பாடு உள்ளது. ஏனெனில் தமிழ் கைதிகள் உடல், உள ரீதியாக மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளமை மட்டுமல்ல, பல்வேறு நோய்களுடனும் நெருக்கடிகளுடனும் தொடர்ந்து வாழ்ந்து வருபவர்கள். இதனால் தமிழ் கைதிகள் இலகுவில் கொரோனா தாக்கத்திற்கு உட்பட்டு தங்கள் உயிர்களை இழக்க நேரிடும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கான சாதகமான நிலைமைகளே உள்ளது.

ஆகவே அரசும் , அரசாங்கமும் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நெருக்கடி நிலைமைகளை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டிய அவசர பணி உருவாகியுள்ளது. மிக நீண்ட காலமாக சிறைத் தடுப்பிலிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அல்லது நிபந்தனையின் உடனான பிணையினையோ வழங்கி விடுதலை செய்ய முன்வரவேண்டும். தமிழ் கைதிகளின் விடுதலையை சமகாலத்தில் ஏற்பட்டுள்ள கொரோனா தாக்கத்தினையும் கவனத்தில் கொண்டு மனிதாபிமானரீதியில் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்தவது மிகப் பொருத்தமான நடைமுறையாகும்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக குரல் கொடுக்கும் அரசியல்வாதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இந்தத் தருணத்தை கைதிகளின் விடுதலைக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

நீண்ட காலமாக உடல் ரீதியிலும், உள ரீதியிலும் பாதிப்புற்று இருக்கும் கைதிகளை இலகுவில் கொரோனா தாக்கும். ஆகவே இவற்றிலிருந்து தமிழ் அரசியல் கைதிகளை பாதுகாக்க யாவரும் ஒன்றிணைந்துசெயற்படுவதுஇன்றைய காலத்தின் கட்டாயமாகின்றது இந்த மனிதாபிமான செயற்பாட்டிற்காக யாவரும் ஒன்றிணைவோம். - என்று உள்ளது.

# அரசின் வரவு - செலவுத்திட்டம் மீது டிசம்பர் 10ஆம் திகதி வாக்கெடுப்பு!

## சபையில் 19 நாள்கள் விவாதம்

2021ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதனை 19 நாள்கள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் முன்னெடுக்கப்படவிருப்பதுடன், நவம்பர் 21ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இடம்பெறும் என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

அதன் பின்னர் நவம்பர் 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும் குழுநிலை விவாதம் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நிறைவுபெறும். அன்றையதினம் பிற்பகல் 5 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் என்றும் செயலாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூடிய நாடாளுமன்றம் அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வரவு – செலவுத்திட்ட விவாதத்தின்போது சபை அமர்வுகள் தினமும் 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 5.30 மணிவரை முன்னெடுக்கப்படும். நவம்பர் 18ஆம் திகதி முதல் நவம்பர் 20ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முற்பகல் 9.30 மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விநேரத்துக்காக ஒதுக் கப்படவிருப்பதுடன் நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதிவரையான காலப் பகுதியில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்துக்காக முற்பகல் 9.30 மணி முதல் முற்பகல் 10 மணி வரையும் நேரம் ஒதுக்கப்படும்.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆளும் கட்சியின் முதற் கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஸ்மன் கிரியல்ல, அமைச்சர்களான நிமல் சிறிபால டி. சில்வா, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், டலஸ் அலகப்பெரும, பிரசன்ன ரணதுங்க, வாசுதேவ நாணயக்கார, அலி சப்ரி ஆகியோரும், நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த சமரசிங்க, ரஞ்சித் மத்தும பண்டார, கயந்த கருணாதிலக, ரவூப் ஹக்கீம், டிலான் பெரேரா, அனுர திஸாநாயக்க, சுமந்திரன் மனோ கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்துடன் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க மற்றும் பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாட்தொகுதி பிரதானியுமான நீல் இத்தவல ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# போகம்பரைச் சிறையில் மேலும் 23 கைதிகளுக்குக் கொரோனா

போகம்பர சிறைச்சாலையில் மேலும் 23 கைதிகள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

போகம்பர சிறைச்சாலையில் 23 கைதிகளுக்கும், குருவிட்ட சிறைச்சாலையில் ஒரு கைதிக்கும் நேற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி வெலிக்கடை, போகம்பர, மாத்தறை மற்றும் குருவிட்ட ஆகிய சிறைகளில் இதுவரை கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண் ணிக்கை 130ஐத் தாண்டிவிட்டது எனச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவித்தன.

# தீகவாவி தாதுகோபுர புனரமைப்பு பணிகள் பிரதமர் மஹிந்த தலைமையில் ஆரம்பம்!

'சொலொஸ்மஸ்தான'விற்குரிய கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள முக்கியத்துவத்திலும், அளவிலும் முன்னுரிமை பெறும் தீகவாவி புனித பூமியிலுள்ள தாதுகோபுரத்தை புனரமைக்கும் பணியின் ஆரம்ப நிகழ்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (புதன் கிழமை) கலந்து கொண்டார்.

முதலில் சமய வழிபாடுகளில் ஈடுபட்ட பிரதமர், அதனை தொடர்ந்து பிரித் பாராயணத்துக்கு மத்தியில் தாதுகோபுர புனரமைப்புப் பணிகளின் ஆரம்ப நிகழ்வை முன்னிட்டு அடிக்கல் நாட்டி வைத்தார்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வில் தீகவாவி ரஜமஹா விகாராதிபதி, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரு பகுதிகளுக்கான துணை பிரதான நீதித்துறை சங்கநாயக்கர் சங்க கீர்த்தி ஸ்ரீ புத்தரக்கித சாம ஸ்ரீ சத்தர்ம வாகீஷ்வர, சத்தர்ம கீர்த்தி ஸ்ரீ, சாஷ்த்ரபதி வணக்கத்துக்குரிய மஹஓய சோபித்த தேரர் அனுசாசனம் நிகழ்த்தினார்.

போர் சூழலுக்கு மத்தியில் அழிக்கப்பட்டு, அபிவிருத்தி தடைப்பட்ட வடக்கு, கிழக்கில் துரித அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டார் என தேரர் குறிப்பிட்டார்.

தீகவாவியை புனித பூமியாக வர்த்தமானியில் வெளியிட்டதன் மூலம் அதனைப் பாதுகாப்பதற்கு பிரதமர் நடவடிக்கை மேற்கொண்டார் என நினைவுகூர்ந்த சோபித்த தேரர், யுத்தத்தை நிறைவுசெய்து நாட்டை ஐக்கியப்படுத்திய பிரதமரின் வரவிருக்கும் பிறந்த தினத்தை முன்னிட்டு அவர் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு பிரார்த்தித்தார்.



நீண்ட காலமாக இயற்கையாலும், மனித செயற்பாடுகளாலும் சீரழிந்துள்ள தீகவாவி புனித பூமியை பல தசாப்தங்களாக பல தடவைகள் இலங்கை அரசாங்கம் மற்றும் பிற தரப்பினரால் புனரமைப்பதற்கு முயற்சித்த போதிலும் அந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன.

முப்படையினரின் முழுமையான பங்களிப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு படையின் ஆளணி பங்களிப்புடன் தொல்பொருள் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைய இரண்டு வருட காலத்துக்குள் தாதுகோபுரத்தின் பணிகளை நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் புனரமைப்புப் பணிக்கமைய தாதுகோபுரத்தைத் தரிசிப்பதற்கு வருகைத்தரும் பக்தர்கள் தங்குவதற்கு ஓய்வு விடுதியொன்றை அமைப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் பாரம்பரியத்தை நிர்வகிப்பதற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவரும் பாதுகாப்பு செயலாளருமான கமால் குணரத்ன உள்ளிட்ட செயலர்கள் ஆலோசித்துள்ளனர்.

புனித பூமியை அழகுபடுத்துவதற்கு மரங்களை நடும் திட்டமும் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதனை ஆரம்பித்து வைத்த கௌரவ பிரதமர் நாக மரக்கன்றொன்றை நாட்டி வைத்தார்.

தாதுகோபுர அண்டத்தின் காவல் வளையங்கள் மற்றும் விகாரை மடம் (விகாரகெய) என்பன 'நா உயன' மடத்தின் பிரதான சங்கநாயக்கர் அகுல்கமுவே ஆரியநந்த தேரரின் அனுசாசனத்திற்கேற்ப, நா உயன அறங்காவல் சபையின் நிதி நன்கொடையில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அதற்கான 7 கோடியே 60 லட்சம் ரூபா காசோலை 'நா உயன' அறங்காவல் சபையின் செயலாளரால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் தமன்கடுவ பிரதேச செயலக பிரிவின் பிரதான சங்கநாயக்கர் அரிசிமலே ஆரண்ய சேனாசனாதிபதி வணக்கத்திற்குரிய பனாமுரே திலகவங் தலைமை தேரர், 'நா உயன ஆரண்ய' மடத்தின் பிரதான சங்கநாயக்கர் அகுல்கமுவே அரியநந்த தேரர், வணக்கத்திற்குரிய பொரளந்தே வஜிரஞான தேரர் உள்ளிட்ட மஹாசங்கத்தினர் கலந்து கொண்டிருந்தனர்.

# கொரோனாத் தொற்று அச்சத்தினால் தற்கொலை செய்வது கவலைக்குரியது!

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு

கொரோனா வைரஸ் அச்சததுக்கு உள்ளான சிலர் தற்கொலை செய்து கொள்வது கவலைக்குரிய விடயமாகும் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வித அறிகுறிகளும் அற்ற தொற்றாளர்களில் 80 சதவீதமானோர் குணமடைந்துள்ளமையைப் போன்று அறிகுறிகளுடன் இனங்காணப்பட்ட பலரும் முழுமையாகக் குணமடைந்துள்ளார்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உடல் நலக்குறைவு அல்லது ஏதேனும் அறிகுறிகள் ஏற்பட்டால் வீட்டிலேயே இருந்துவிடக்கூடாது என்றும் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்று தொடர்பான அச்சத்தில் சிலர் தற்கொலை செய்துகொள்கின்றமை கவலைக்குரிய விடயமாகும் எனத் தெரிவித்துள்ள ஜயருவான் பண்டார, இது செய்யக்கூடாததும் இடம்பெறக்கூடக் கூடாததுமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ்வாறு அச்சமடைய வேண்டிய தேவை கிடையாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொற்றுக்கு உள்ளானவர்கள் அருகில் இருந்தாலும் முகக் கவசத்தை முறையாக அணிந்திருந்தால் ஏனையோர் தொற்றுக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகும் என்றும் கொரோனாவுடன் வாழ்வதற்கு இந்த அடிப்படை சுகாதார விதிமுறைகளை நிச்சயம் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# பொருளாதாரத்தை மேம்படுத்த அரசிடமுள்ள திட்டம் என்ன?

## கபீர் ஹாசிம் கேள்வி



கொழும்பு, நவ.12

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மேம்படுத்த அரசாங்கத்திடம் என்ன திட்டங்கள் இருக்கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கேள்வியெழுப்பிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ கடந்த மார்ச் மாத காலப்பகுதியில் கொரோனா தொற்று பரவலைத் தன்னால் இலகுவில் வெற்றி கொள்ள முடியும் எனக் கூறியிருந்தார். ஆனால் தற்போது வைரஸ் பரவல் யுத்தம் இல்லை என்றும், யுத்தம் என்றால் தான் இலகுவில் வெற்றி கொள்வேன் என்றும் கூறியிருக்கிறார். அவர் வைரஸ் பரவல் தொடர்பில் மக்கள் மீதும் ஊடகங்கள் மீதும் பழிசுமத்துகின்றார்.

இந்த வருடத்திலேயே அதிகளவிலான நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வைரஸ் பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அடங்கிய பொதிகளை வழங்குவதாக அரசாங்கம் தெரிவித்தது. அந்த பொதிகளில் 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்களே இருக்கின்றன.

ஆரம்பத்தில் மக்கள் வர்த்தக நிலையங்களிலும் சதோச நிலையங்களிலும் வரிசையாக நின்றமையை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. ஆனால் தற்போது தங்க நகையை அடகு வைப்பதற்கு வரிசையில் காத்திருக்கின்றனர். தேங்காயை, விற்பனை செய்வதற்கு சுற்று நிரூபங்களை வெளியிட்ட அரசாங்கம் வரிவருமானத்தையும் குறைத்துள்ளது.

ஊழியர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றிற்கு தையலாளர்கள், உதவியாளர்கள் தேவை

தொடர்புகளுக்கு:- 077 7114 848
applicationagi@outlook.com

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1992.07.31
மதம் - இந்து K
நட்சத்திரம் - மகம்
செவ் - 7இல்
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer
அழகான பெண், நல்ல குடும்பம் விரும்பத்தக்கது.

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1991.12.12
மதம் - இந்து K
நட்சத்திரம் - அவிட்டம் 4
பாவம் - 4
செவ்/ சூரி - 9இல்
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor or Engineer.

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முகநூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2020 இல் வெளியிடப்பெற்றது.

# கொரோனாவுக்குப் பின்னரான உலகம்
# இயற்கைக்கான தருணம்

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை 1-30, 2020



**ஆளுக்கொரு மரம் நடுவோம்**
**நாளுக்கொரு வரம் பெறுவோம்**

கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்

**விளம்பர அனுசரணை:-** காலைக்கதிர் Kalaikkathir